விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 048 வள்ளுவர் ஆண்டு 2053 தை 23 சனிக்கிழமை (05.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஸ்ரீ லங்காவின் சுதந்திரநாள்

# 'தமிழ்த் தேசத்தின் கரிநாள்'

### உறவுகள், சிவில் அமைப்புகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பு கவனயீர்ப்பு



(முல்லைத்தீவு)

இலங்கையின் சுதந்திர நாள் "தமிழ்த் தேசத்தின் கரிநாள்" எனும் தொனிப்பொருளில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், சிவில் அமைப்புகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரால் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(03ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்புக் கொடிகளுடன்
# கடலில் இறங்கி
## மீனவர்கள் போராட்டம்



09 ஆம் பக்கம் பார்க்க

# உறவுகள் யாழில் 'கரிநாள்' பேரணி




06 ஆம் பக்கம் பார்க்க

# மீனவர்கள் சார்பில் நீதிமன்றில் வழக்கு

## சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக பாராளு மன்றஉறுப்பினர் ஜனாதிபதி சட் 15

## சுதந்திர தின நிகழ்வில்
# மாணவர்கள் உட்பட 18 பேர் மயங்கி விழுந்தனர்

(வவுனியா)

வவுனியாவில் சுதந்திர தின நிகழ்வில் மாணவர்கள் உள்ளிட்ட 18 பேர் திடீரென மயங்கி விழுந்த நிலையில் முதலுதவிச் சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையின் 74ஆவது சுதந்திர தினக் 15

## சரியானதைச் செய்வதே இலக்கு

# நாட்டில் எல்லோரையும் திருப்திப்படுத்துவதல்ல

### சுதந்திர தின உரையில் ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டுக்குச் சரியானதை செய்வதே எமது இலக்கு. அதனைவிடுத்து நாட்டில் எல்லோரையும் திருப்திப்படுத்துவது அல்ல என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனா
# 29 மரணம்
# +1,243 பாதிப்பு

(கொழும்பு)

நாட்டில் மேலும் 29 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட் 15

## உயிரோடு வாழும் மீனவர்களை காப்பாற்றுங்கள்

### மீனவர்களின் ஆத்மாவாக போராட்டத்தில் கோரிக்கை



(கரணவாய்)

உயிரிழந்த மீனவர்களின் ஆத்மாவாக கேட்கிறேன் "அத்து மீறல்களை கட்டுப்படுத்தி, உயிரோடு வாழும் மீனவர்களை காப்பாற்றுங்கள்" என ஒருவர் கோரிக்கை 15

## குற்றத்தடுப்பு பிரிவுக்கு சென்ற பேராயர்

(கொழும்பு)

பொரளை அனைத்துப் புனிதர்களின் தேவஸ்தான வளாகத்திலிருந்து கைக்குண்டு மீட்கப் 15

# யாழ்.பல்கலையில் எதிர்ப்புப் பதாதை




(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் கறுப்பு துணி கட்டப்பட்டு சுதந்திர தினத்தை கரிநாளாக மாண 15

## சுதந்திர தின நிகழ்வுகளை புறக்கணித்த சஜித்

(கொழும்பு)

தேசிய சுதந்திர தின நிகழ்வுகளை எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ 15

# குருந்தூர்மலையில் கூட்டமைப்பு வழிபாடு



(முல்லைத்தீவு)

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினமான நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முல்லைத்தீவு - 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடந்த குற்றங்களுக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும்

## ஜே.வி.பி செயலாளர் ரில்வின் சில்வா

குற்றவாளிகளை எவ்வித விசாரணையும் இன்றி விடுதலை செய்யும் அரசாங்கம் நடந்த குற்றங்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜேவிபி) பிரதான செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அந்த முன்னணியின் தலைவர் அல்லது கட்சியினர் எவருக்காவது சிறுகீறல் சேதத்தை ஏற்படுத்தினாலும் அதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அண்மையில் கம்பஹா மாவட்டத்தில் நடந்த மாநாட்டுக்கு வந்து தாக்குதல் நடத்த முயற்சித்தவர்களை பிடித்து பொலிஸிடம் ஒப்படைத்தபோதிலும் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸார் அவர்களிடம் வாக்குமூலங்களை மாத்திரம் பதிவு செய்துள்ளனர். கைது செய்யவில்லை. இதன்மூலம் இந்த தாக்குதல் முயற்சியின் பின்னர் பலமிக்க சக்தி இருப்பது தெரிகிறது எனவும் ரில்வின் சில்வா குறிப்பிட்டுள்ளார். (ம)

# நாடு எந்த திசையில் பயணிக்கிறது என்று அரசுக்கு தெரியவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

நாடு எந்த திசையை நோக்கி பயணிக்கின்றது என்பது அரசாங்கத்தில் இருக்கும் எவருக்கும் தெரியாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வது குறித்து அரசாங்கத்தில் இருப்போர் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொட்டாவை பிரதேசத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

நாடு எந்த திசையில் செல்கிறது என்பது எவருக்கும் தெரியாது. சர்வதேச நாணய நிதியத்திற்கு கடிதம் எழுதியுள்ளதாக கூறுகின்றனர். அப்படியான கடிதம் கிடைக்கவில்லை என்று நாணய நிதியம் கூறுகிறது.

என்ன கேலிக் கூத்து. நாட்டுக்கு ஏற்பட்டுள்ள கதி. முற்றாக நாடு சீரழிந்துள்ளது. இதனால், எதிர்காலத்தில் நாங்கள் அச்சாறு போன்ற அரசாங்கத்தை அமைக்க மாட்டோம்.

சரியான திசையில், சரியான பயணத்தில் செல்லக்கூடிய பணிகளையும் சேவைகளை செய்யக்கூடிய அரசாங்கத்தை அமைப்போம். அரசியல் நிர்வாகத்தை அனைவரும் விரும்புகின்றனர்.

20 ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து நிர்வாகம் செய்கின்றனர். கடுமையான சட்டங்களை இயற்றி நிர்வாகம் செய்கின்றனர். ஜனநாயகத்தை அழித்து நிர்வாகம் செய்கின்றனர். முகநூலில் பதிவு ஒன்றை இட்டால், குற்றவியல் விசாரணை'திணைக்களத்திற்கு அழைத்துச் செல்கின்றனர்.

நாட்டுக்கு இவை தேவையில்லை. சேவைகளே நாட்டுக்கு தேவை. இதனால், அரசியல் நிர்வாகம் என்ற வார்த்தையையும் அரசியல் சேவை என்று மாற்ற வேண்டும். அந்த புரட்சியை செய்யவும் நாங்கள் தயாராக இருக்கின்றோம் எனவும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார். (ம)

## குருந்தூர்...

தண்ணிமுறிப்பு குருந்தூர்மலைக்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். குருந்தூர்மலையில் நீதிமன்ற கட்டளைக்கு முரணாக கட்டப்படுகின்ற கட்டடங்களை பார்வையிட்டதுடன், அங்கு ஆதி ஐயனார் திரிசூலம் இருந்த இடத்தில் வழிபாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் இந்த விஜயத்தில் தமிழ்தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரன், இராசமாணிக்கம் சாணக்கியன், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், எம்.கே.சிவாஜிலிங்கம், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை தவிசாளர் சுரேன், கரைச்சி பிரதேசசபை உறுப்பினர் ஜீவன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சி.லோகேஸ்வரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணி தலைவர் கி.செயோன் ஆகியோருடன் பொதுமக்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-281)


### யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
### பழைய மாணவர் சங்கத்தினை மீளமைப்பதற்கான

## பொதுக்கூட்டம்

யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தினை மீளமைப்பதற்கான பொதுக்கூட்டம் 20.02.2022 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

திரு.சு.துரைரத்தினம்
அதிபர்

05.02.2022 (10052) 077 711 0027


## மரண அறிவித்தல்



பிறப்பு 09 - 03 - 1950

இறப்பு 04 - 02 - 2022

### திருமதி அரியமலர் கனகரட்ணம் (கிளி)

கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கு விளிசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியமலர் கனகரட்ணம் (கிளி) நேற்று (04.02.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இளையவி - லட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் அப்புத்துரை - சற்குணத்தின் அன்பு மருமகளும் பாலசிங்கம், திலகவதி, இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் வசந்தகுமார், வசந்தகுமாரி, சசிகுமார், உமாதேவன் (உமா), அரியரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜயநிர்மலா, இரகுநாதன், பத்மினி, ஸ்ரீரஞ்சினி, சாருத் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஸ்ரீதரன், காலஞ்சென்ற சண்முகலிங்கம் (கட்டி) மற்றும் இராசயோகம், வரதலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சாருகன், சாருகா, டினேஸ்காந், தர்மேஸ், நிவேதி, நிகிதன், மதிவர்மன், மதுசனா, தக்சயன், அரிசா, சாரவ் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நாளை (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
விளிசிட்டி. (10048)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### செல்வி குணரத்தினம் கணபதிப்பிள்ளை

தோற்றம் 03.04.1942 மறைவு 03.02.2022



மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி குணரத்தினம் கணபதிப்பிள்ளை கடந்த 03.02.2022 (வியாழக்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை (முன்னாள் கிராமசபை உறுப்பினர், உரிமையாளர் - குட்லக் சைக்கிள் வேர்க்ஸ்), கனகம்மா ஆகியோரின் அருமைச் சகோதரியும் காலஞ்சென்ற சின்னராசா மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அருமை மைத்துனியும் காலஞ்சென்றவர்களான ஜீவமலர், ஜீவகுமார், விஜயமலர் மற்றும் சிறிதரன் (உரிமையாளர் - சிறி அம்பாள் எலக்றிக்கல்ஸ் அன்ட் வெல்டேர்ஸ்), உமாராணி, ரவிக்குமார் ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் சத்தியானந்ததேவி (ஓய்வு நிலை ஆசிரியை), ரேவதி, சாந்தா, சுதேந்திரன், குணேந்திரன் ஆகியோரின் அருமை மாமியாரும் சிறிஸ்கந்தவேள், ரவீந்திரநாதன், தயாசக்தி (விதினி), காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் சுகிர்தரஞ்சன், றஜித்தா, ஜெனற் றஜனி ஆகியோரின் அருமை அன்ரியும் வேதிகா, கார்த்திகா, கீர்த்திகா, கௌதமன், ராகுலன், ஆரூரன், யாதவன், துளசி, ஆரபி, ராகவி, ஆகாஷ், துவாரகன், சாகித்தியன், திலோத்தமன், பூர்விகா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் வைஷ்ணவி, ஸ்வாகா, ருத்திரன், ஆதிரா, றெமோ, நிஸ்வின் ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (06.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எருக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : சி.சிறிதரன்

மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

021 221 3203
077 659 5256

உரிமையாளர் - சிறி அம்பாள்
எலக்றிக்கல்ஸ் அன்ட் வெல்டேர்ஸ்

(10054)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்காவின் சுதந்திர நாள்

# தமிழர் தேசத்தின் கரிநாள்




(பனிக்கன்குளம்)

"ஸ்ரீலங்காவின்சுதந்திர நாள் தமிழர் தேசத்தின் கரிநாள்!" எனும் தொனிப் பொருளில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று நடைபெற்றது. வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் வடக்கு-கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் , பாதிக்கப்பட்ட தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து இந்த போராட்டத்தினை முன்னெடுத்தனர். முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இருந்து ஆரம்பமான இந்த கவனயீப்புப் பேரணி முல்லைத்தீவு வட்டுவாகலை சென்றடைந்தது.


குறித்த போராட்டத்தில் மத தலைவர்கள், வடக்கு-கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களின் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அரசியல்பிரமுகர்கள், சமூக ஆர்வலர்கள், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (நி-5-281)

# இலங்கை-இந்திய கடல் எல்லை வரையறைகளால் பாதிக்கப்படுவது ஏதுமறியா தமிழ் மீனவர்களே

## நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்

(சென்னை)

எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி ஈழத்தாயகத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் கடலோர பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த இரண்டு மாத காலத்திற்கும் மேலாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளமை மிகுந்த வருத்தமளிக்கிறது என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் மட்டக்களப்பிலிருந்து மீன் பிடிக்க வந்த மீனவர்கள் நால்வரும் படகு இயந்திரத்தில் ஏற்பட்ட பழுதின் காரணமாகத் தமிழ் நாட்டின் எல்லைக்குள் கரை ஒதுங்க நேரிட்டது.

ஆகவே, அவர்களை எல்லை தாண்டியதாகக் கூறி கைது செய்து இருப்பது சட்டத்திற்குப் புறம்பானதாகும்.

இரு நாட்டின் கடல் எல்லை வரையறைகளாலும் அரசு அதிகாரத்தின் அடக்கு முறைகளாலும் பாதிக்கப்படுவது இரு நிலங்களிலும் வாழும் ஏதுமறியா தமிழ் மீனவர்கள் தான் என்பதை தமிழ் நாடு அரசு உணர வேண்டும்.

ஆகவே, எல்லை தாண்டியதாகக் கூறி கைது செய்யப்பட்டு சென்னை புழல் சிறையில் வாடும் ஈழத்தமிழ் இஸ்லாமிய மீனவர்கள் நால்வரையும் விடுவித்து, நாடு திரும்பச் செய்து, அவர்களது குடும்பத்தின் கண்ணீரைத் துடைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சீமான் தெரிவித்தார். (நி-5)



இலங்கையின் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று சுதந்திர சதுக்கத்தில் இடம்பெற்றது.

"சவால்களை வெற்றி கொண்ட வளமான நாள் சுபீட்சமான தாய் நாடு என்ற தொனிப்பொருளில் இவ் வருடம் தேசிய சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளிர்கால ஒலிம்பிக் சீனாவில் ஆரம்பம்




பெரும் எதிர்பார்ப்பு மற்றும் எதிர்ப்புக்கு மத்தியில் சீனாவில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

இறுக்கமான கொவிட்-19 கட்டுப்பாடுகள், ' மனித உரிமை மீறல்கள் மற்றும் புறக்கணிப்பு குற்றச்சாட்டுகள் மீதான அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் சீனாவில் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகின்றன.

முன்னதாக அமெரிக்கா, பிரித்தானியா, கனடா மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள், சீனாவின் மனித உரிமைகள் பதிவு குறித்த கவலைகள் காரணமாக குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு அரசாங்கப் பிரதிநிதிகளை அனுப்பப் போவதில்லை என. கூறி புறக்கணித்திருந்தன.

ஆனால், மேற்குறித்த நாடுகளால் முன்வைக்கப்பட்ட ஸின்ஜியாங்கின் மேற்குப் பகுதியில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் உய்குர் சிறுபான்மையினரை ஒடுக்கியதில் சீனா இனப்படுகொலை கூறப்படும் குற்றச்சாட்டுகளை சீனா கடுமையாக மறுத்துள்ளது.

ஹொங்கொங்கில் அரசியல் சுதந்திரம் மீதான ஒடுக்குமுறை மற்றும் சீன டென்னிஸ் வீராங்கனை பெங்ஷீவாய் பற்றிய கவலைகள் தொடர்பாகவும் முறுகல் நிலை நீடிக்கின்றது.

நேற்று ஆரம்பமாகிய குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள், எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வரை நடைபெறும்.

1,581 ஆண்கள் மற்றும் 1,290 பெண்கள் அடங்கலாக, மொத்தமாக 2,871 வீர, வீராங்கனைகள் இந்த ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கின்றனர். மொத்தமாக 91 நாடுகள் பங்கேற்கின்றன. (4-6)

## மானிப்பாய் இந்துவை வென்றது மகாஜனா தொடர்ந்து மூன்றாவது போட்டியிலும் வெற்றி



இலங்கைப் பாடசாலைகள் துடுப்பாட்ட சங்கத்தால் பிரிவு 3 பாடசாலைகளின் 15 வயது அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் போட்டியில் கடந்த 2 ஆம் திகதி மகாஜனக் கல்லூரி மைதானத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்கொண்ட மகாஜனா 105 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடி மகாஜனா 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 318 ஓட்டங்களை பெற்றது. மகாஜனா சார்பில் அபிசாந் ஆட்டமிழக்காமல் 102, துசாகன் 55 ஓட்டங்களை பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்து 44.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது. மகாஜனா சார்பில் துலக்சன் 2, துசாகன் 2, மொகமட் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

மகாஜனா தனது குழுவில் இடம்பெற்ற 3 பாடசாலைகளையும் வெற்றி கொண்டமை சிறப்பம்சம் ஆகும். (4-105)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2503

### ராம்

வாழ்க்கைய பிரிட்ஜ் மாதிரி cool ஆக வாழலாம் என்று நினைச்சா



ஆனா அது வாஷங்மெஷின் மாதிரி புரட்டி எடுக்குது

### சீத்தா

பொண்டாட்டி புதுசா ஒரு புத்தகம் வாங்கி படிச்சா அதுக்கு நீங்க ஏன்னே பயந்து சாகுறீங்க



சும்மா இருய்யா, புத்தகம் பேரு என்ன தெரியுமா?
இரத்தம் வராமல் அடிப்பது எப்படி

### நிதர்சன்

ஏய் இங்க பாருடி சும்மா சும்மா ATM உள்ள போறான் பெரிய பணக்காரனா இருப்பான் போல




நானே அடிக்குற வெயிலுக்க சும்மா ATM A/C இல காத்து வாங்க போறேன் இவளுக வேற

### சாருகா

Me : வாதியாரே இன்னைக்கு ஆபிஸ் இருக்கா?
Manager : ஏன்பா ஏதாவது முக்கியமான வேலை பென்டிங்ல இருக்கா?



Me : அட அதெல்லாம் ஒன்னுமில்லை எங்க ஏரியால பவர்கட் ஆபிஸ் இருந்தா அங்க வந்து போனுக்கு சார்ஜ் போட தான் கேட்டேன்

### நிக்சிகன்

During Studdy Holidays




ஹலோ மச்சான் எக்ஸாம்க்கு படிச்சிட்டியா?




cha cha Book கூட நான் தூங்கல மச்சான்

### வைஷ்ணவி

உங்க பொண்ணுக்கு 30 இலட்ச ரூபாய் செலவு பண்ணி கல்யாணம் பண்ணீங்களே! பொண்ணு எப்படி இருக்கா?



அவ நல்லாத்தான் இருக்கா!!
மாப்பிள்ளை தான் 50 இலட்ச ரூபாய் தருறேன் மாமா என்னைக் காப்பாத்துங்கனு கெஞ்சிறான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிரதத்தில் இருந்து தவறி விழுந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்

## செல்பி எடுக்க முயன்ற வேளை பரிதாபம்

(பதுளை)

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்ற புகையிரதத்தில் இருந்து ஒய்ய பகுதிக்கும் இதழ் கஸ்ஸின்ன பகுதிக்கும் இடைப்பட்ட சுரங்கத்துக்கு அருகில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் தவறுதலாக கீழே விழுந்துள்ளார். இதனையடுத்து, அவரை காப்பாற்ற முயன்று, பயணித்துக்கொண்டிருந்த புகையிரதத்தில் இருந்து பாய்ந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இளைஞரும் காயமடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

புகையிரதத்தின் கதவு பகுதியில் நின்றவாறு, மேற்படி யுவதி செல்பி எடுக்க முயன்றபோது, தவறி விழுந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இருவரும் தியத்தலாவை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன்.

இது தொடர்பில் ஹப்புத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 08.01.2022 அன்று

சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர். **குணபாலசிங்கம் செல்வச்சிவகுமரன் (ரவி)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 07.02.2022 திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும்.

அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

தெணியம்மன் கோயிலடி,
(மீன் சந்தை முன்பாக)
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.


# இராசிபலன்

05.02.2022
தை 23, சனிக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 8.02 மணிவரை

உத்திரட்டாதி முன்னிரவு 8.16 மணிவரை
சுபநேரம் - 3.35-5.35 மணிவரை
இராகுகாலம் -9.35-11.05 மணிவரை

சந்திராஷ்டமம்-ஆயிலியம்
மகம்

வளவன்

**மேஷம்** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**ரிஷபம்** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையலாம்.

**மிதுனம்** தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.

**கடகம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், புகழ்மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், உடல் நலன் சீராகும்.

**சிம்மம்** குடும்பத்தில் சிறுசிறு குழப்பங்கள் தோன்றி மறையும், நடப்பதெல்லாம் நன்மைகே யென நினைக்க வேண்டிய நாள். தேக நலனில் கவனம் செலுத்தும் நிலை ஏற்படலாம்.

**கன்னி** பொறுமையால் பெருமை சேரும் நாள், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**துலாம்** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு, பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் அகலும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறும்.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்** குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்** திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லவிதமாக அமையும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

தீய செயலை பாராட்டுபவன் தீயவனாகத் தான் இருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "சுதந்திரதினம் தமிழரின் கரிநாள்"
# யாழ்.நகரிலும் பேரணி!

(யாழ்ப்பாணம்)

**இலங்கையின் சுதந்திரதினம் தமிழர்களின் கரிநாள் எனத் தெரிவித்து இலங்கையின் சுதந்திர தினமான நேற்று வெள்ளிக்கிழமை வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் கவனயீர்ப்புப் பேரணி இடம்பெற்றது.**

யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பமான கவனயீர்ப்புப் போராட்டம் சுமார் அரைமணி நேரம் வரை இடம்பெற்று பின்னர் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பேரணியாகச் சென்று யாழ்.முனியப்பர் ஆலய முன்றலில் பேரணியை நிறைவு செய்து அங்கு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டம் மற்றும் பேரணியில் கலந்து கொண்டவர்கள் கறுப்புக் கொடிகளைத் தமது கைகளில் தாங்கியும், பல்வேறு கோஷங்களை எழுப்பியும் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். (4-5-18-33-104)

# சுன்னாகத்தில் சுற்றிவளைப்பு

- 80 லீற்றர் கசிப்பு,
- 17 பீப்பாய் கோடா,
- 21 லட்சம் பணம் மீட்பு.



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - சுன்னாகம் பகுதியில் கடந்த முதலாம் திகதி தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 80 லீற்றர் கசிப்பு, 17 பீப்பாய் கோடா மற்றும் 21 இலட்சத்தி 87 ஆயிரத்து 555 ரூபாய் பணத்துடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் கடந்த 2 ஆம் திகதி முற்படுத்திய நிலையில் சந்தேகநபர்களை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்லிப்பழை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். (4-5-33)

# வழிப்பறிக் கொள்ளையர் ஒருவர் சிக்கினார்
## மற்றையவருக்கு வலைவீச்சு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிப் பொதுச் சந்தைக்குச் செல்வோரை இலக்கு வைத்துக் கோப்பாய்- இராசபாதை வீதியில் வழிப்பறியில் ஈடுபட்டு வந்த ஒருவரைக் கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த இரு நபர்கள் இராச பாதை வீதியில் உள்ள தோட்ட வெளியில் ஆள்நடமாற்றம் அற்ற பகுதிகளில் நின்று காலை வேளையில் திருநெல்வேலி பொதுச் சந்தைக்கு மரக்கறி வாங்கச் செல்வோர் மற்றும் மரக்கறி கொண்டு செல்வோரை வழி மறித்து பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசி உள்ளிட்டவற்றை பறித்து வந்துள்ளனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் சம்பவம் தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் வழிப்பறிக் கொள்ளையில் ஈடுபட்ட சந்தேகத்தில் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

மற்றைய நபரையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (4-5-18-33)

# வவுனியா சுதந்திரதின நிகழ்வில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை
## பலர் அதிருப்தி

(குருமன்காடு)

வவுனியாவில் இடம்பெற்ற சுதந்திர தின நிகழ்வில் பௌத்த மதகுருமாருக்கு முன்னுரிமையளிக்கப்பட்டதுடன், தமிழ்க் கலாசார நிகழ்வு மூன்றாம் நிலைக்கு தள்ளப்பட்டிருந்தது.



இலங்கையின் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வு வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது நிகழ்வுக்கு அழைத்து வரப்பட்ட மதகுருமார்களில் பௌத்த பிக்குகளுக்கு முன்னுரிமையளித்து அவர்கள் அமர்ந்திருந்த இருக்கைகளுக்கு வெள்ளைத்துணி விரிக்கப்பட்டு மதிப்பளிக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் அங்கு வந்த இந்து, இஸ்லாமிய, கத்தோலிக்க மத குருமார்களுக்கு விருந்தினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தைதைப் போன்று சாதாரண இருக்கைகள் வழங்கப்பட்டிருந்தன.

இதன் மூலம் மூவின மக்கள், நான்கு சமயங்களைச் சேர்ந்தவர்கள் வாழும் வவுனியா மண்ணில் பௌத்தத்திற்கு முன்னுரிமை வழங்கப்பட்டு ஏனைய மதகுருமார்களுக்கு அவர்களுக்குரிய கௌரவம் வழங்கப்படவில்லை என பலரும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கலாசாரத்தை வெளிப்படுத்தும் நாட்டிய, நடன நிகழ்வு இடம்பெற்ற போது சிங்கள கலாசார நடனம் முதலாவதாகவும், இஸ்லாமிய கலாசார நடனம் இரண்டாவதாகவும் இடம்பெற்றதுடன் தமிழ் கலாசார நிகழ்வு மூன்றாவதாக நடந்துள்ளது.

வவுனியாவில் தமிழ் மக்கள் அதிகமாக வாழ்ந்து வருவதுடன், நிகழ்வில் கலந்து கொண்ட பிரதம அதிதி உள்ளிட்ட அதிகமானோர் தமிழர்களாக இருந்த நிலையில் தமிழ் கலாசாரத்தை மூன்றாம் நிலைக்கு கொண்டு சென்றமை தொடர்பில் பலரும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (4-5-250)



குருநகர் புனித புதுமை மாதா ஆலய திருவிழாத் திருப்பலி கடந்த புதன்கிழமை யாழ்.மாவட்ட ஆயர் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் தலைமையில் நிறைவேற்றப்பட்டு 400 ஆவது ஆண்டு யூபிலி விழாவும் சிறப்பாக இடம்பெற்றது. அன்று மாலை 4.30 மணியளவில் அன்னையின் திருச்சுரூப பவனியும் இடம்பெற்றது. (படம் : ஏனெஸ்ற்)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற் கொண்டு ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் நாளை 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை ஆவரங்கால் சிவன் கோவில் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

குறித்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு இரத்த தான முகாம் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4-5-18)

# அந்தனிபுரம் மீனவர்களும் போராட்டத்தில் குதிப்பு



(அராலி)

இந்திய இழுவை மடி தொழிலால் பாதிக்கப்பட்ட இலங்கை மீனவர்கள் தமக்கு தீர்வு பெற்றுத் தருமாறு கோரி யாழின் பல்வேறு பகுதிகளிலும் ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் பலாலி அந்தனிபுரம் பகுதி மீனவர்களும் தாம் கடலில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் வழங்குமாறு கோரி நேற்றுக் காலை கறுப்புக் கொடிகள் கட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (4-5-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியீடு

(கொழும்பு)

2020 உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் 2020/2021 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

வெட்டுப்புள்ளிகளை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இணையதளம் வழியாக பார்வையிடலாம்.

40,000 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்றுள்ளனர். 2020 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையின் மீள்திருத்தப் பெறுபேறுகள் வெளியான பின்னர், இந்த வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளமையினால் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதியான மாணவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். (நி-5)

# பீரிஸ் இந்தியாவுக்கு விஜயம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நாளை இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. (நி-5)

## முதியோர்களுக்கான இலவச தங்குமிட வெற்றிடங்கள்

தகுதி

1) எதுவித வாழ்வாதாரங்களும், வீடு வசதிகளும் பராமரிப்பும் இல்லாதவர்களாக இருக்க வேண்டும்.
2) 60 வயதிற்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.
3) கடுமையான நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
4) உணவு, உடை, உறைவிடம் மற்றும் அடிப்படை மருத்துவ வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.
5) covid-19 இரு தடுப்பூசிகளும் எடுத்தவர்களாக இருக்க வேண்டும்.
6) உங்கள் கிராம சேவையாளரின் கடிதமும் உங்கள் சகோதரர் அல்லது உறவினர்களின் தொலைபேசி இலக்கமும் வழங்கப்பட வேண்டும்.

நவீன வசதி கொண்ட பிரத்தியேகமான அறைகளும் வாடகைக்கு உண்டு. ஆனாலும் உணவு மற்றும் அடிப்படை வசதிகள் இலவசமாக வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு**
**முகாமையாளர் - 077 449 9619**
**அலுவலக உத்தியோகத்தர் - 076 243 8809**

**தங்கம்மா முதியோர் இல்லம்,**
**புதுக்குளம்,**
**கனகராயன் குளம்.** (இ)

## கும்பாபிஷேக தின உற்சவம்

குப்பிழான்)

குப்பிழான் சொக்கவளவு சோதிவிநாயகர் ஆலய கும்பாபிஷேக தின உற்சவம் நாளை 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

விசேட அபிஷேக பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து 108 சங்காபிஷேகமும், அதனைத் தொடர்ந்து விநாயகப்பெருமான் உள் வீதி வலம் வரும் திருக்காட்சியும் நடைபெறும். (4-5-18)

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர் மாற்றம்
### 206, அம்மன் கோவில் வீதி, வட்டாரம் - 03

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகம் எல்லைக்குட்பட்ட வட்டாரம் 03 அம்மன் கோவில் வீதியிலுள்ள இல: 206 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **இத்தினி முருகேசு** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தினை **சின்னப்பு அப்புத்துரை** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு இ.கந்தையா முகதாவில் நிறைவேற்றப்பட்ட 20388/23.02.1955ம் இலக்க உறுதியால் **சின்னப்பு கந்தையா** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**குஞ்சர் இராமு** ஆகியவர் குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு சி.கந்தசாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 3248/18.05.1955ம் இலக்க உறுதியால் குறித்த **சின்னப்பு அப்புத்துரையும், குழந்தையர் முருகேசுவும் பெண் இலட்சுமியும், சின்னட்டி கிருட்டிணரும் பெண் ஆச்சிப்பிள்ளையும், முருகேசு சண்முகமும் பெண் இரத்தினமும், இளையதம்பி மார்க்கண்டுவும் பெண் இராசமணியும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தினை **இராமு இராசையா** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு வ.பரமானந்தம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1473/17.02.1979ம் இலக்க உறுதியால் குறித்த **குஞ்சர் இராமு** ஆகியவரிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தினை **குணரத்தினம் டிலக்ஷன் பெண் கஜந்தினி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு செல்வி.பரமநாதன் திலக்ஷனா முகதாவில் 718/07.09.2020ம் இலக்க உறுதியால் குறித்த **இராமு இராசையா** ஆகியவரிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரனார்.

குறித்த **குணரத்தினம் டிலக்ஷன் பெண் கஜந்தினி** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **குணரத்தினம் டிலக்ஷன் பெண் கஜந்தினி** ஆகியவருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை.**

(10031)

# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா: 14½ செவ் 11 சூரி 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி லண்டன் PR<br>எதிர்பார்ப்பு: A/L படித்த பெண்<br>தொ.இ: B/12250 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: 27¼ சூரி , செவ் 10<br>உயரம்: 154 cm<br>தகைமை/தொழில்: A/L ICT Diploma in IT<br>எதிர்பார்ப்பு:உள்நாடு வெளிநாடு<br>தொ.இ: G/12363 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்:அவிட்டம் 3<br>கி.பா: 42 செவ் 3 சூரி 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/ தொழில்: A/L மலிபன் கொம்பனி<br>எதிர்பார்ப்பு:படித்தபெண் வெளிநாடு விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12251 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா: செவ் 12 சூரி 11 இல்<br>உயரம்:1 59 cm<br>தகைமை/தொழில்: கலைமாணி பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ:G/12368 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: செவ் 11 சூரி 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: படித்த குணமான பெண்<br>தொ.இ: B/12252 | பிறப்பு:1997இந்து<br>நட்சத்திரம்:அனுசம் உயரம்:5'7"<br>கி.பா: 34 செவ் 1 சூரி 11<br>தகைமை/தொழில்: உயர்தரம் ஆங்கில மொழி மூலம் கல்விகற்றவர் மனிதவுரிமை ஆணைக்குழவில் வேலை செய்கிறார்<br>எதிர்பார்ப்பு : படித்த நல்ல தொழில் அல்லது வியாபாரம் செய்யும் மணமகன்<br>தொ.இ:G/12369 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 4<br>கி.பா: செவ் 6 சூரி 5 இல்<br>உயரம்: 184 cm<br>தகைமை/தொழில்:A/L முகாமையாளர் தனியார்<br>எதிர்பார்ப்பு: படித்த சிறு தொழில் செய்பவர்<br>தொ.இ: B/12253 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை 1<br>கி.பா: செவ் 12 சூரி 9 இல் உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: விஞ்ஞான ஆசிரியை<br>எதிர்பார்ப்பு:உயர் பதவி வெளிநாடு ஆயின் லண்டன், அவுஸ்ரேலியா<br>தொ.இ:G/12374 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]**
**சேவைக் கட்டணமாக ரூபா 500 [illegible].**

# திருமண வாழ்த்து



**05.02.2022 இன்று திருமண பந்தத்தில் இணையும் யாழ்.மாநகர முதல்வரும், சட்டத்தரணியுமான மணிவண்ணனுக்கும் பெண் அபிராமிக்கும் வாழ்வில் எல்லா நலனும் பெற்று பெருவாழ்வு வாழ கடவுளை வேண்டி வாழ்த்தும்**


[illegible]தெரு சந்தி,
யாழ்ப்பாணம்.

குமார் அண்ணா (யாழ்)
ராணி அக்கா (பிரான்ஸ்)
ராஜன் அண்ணா (பிரான்ஸ்)
சிறி அண்ணா (பிரான்ஸ்)
குமுதா அக்கா (பிரான்ஸ்)
அவர் தம் குடும்பத்தினர்.

(10023)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைஜீரியாவில் எண்ணெய் கப்பல் வெடித்து சிதறியது



(நைஜர்)

நைஜீரியாவில் ஒரு மிதக்கும் உற்பத்தி, சேமிப்பு மற்றும் ஏற்றிச் செல்லும் கப்பல் வெடித்து சிதறியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.


இந்த கப்பலில் இருந்த 10 பேரின் நிலை குறித்து இன்னமும் உறுதியான மற்றும் தெளிவான தகவல்கள் இல்லை.

இரண்டு மில்லியன் பீப்பாய்கள் வரை எண்ணெயை சுமந்து செல்லும் திறன் கொண்ட, நைஜீரியாவின் ஷெபா ஆய்வு மற்றும் தயாரிப்பு நிறுவனத்துக்கு சொந்தமான எண்ணெய் உற்பத்திக் கப்பலான டிரினிட்டி ஸ்பிரிட் கப்பலே நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை உக்போகிடி எண்ணெய் வயல் அருகே வெடித்தது.

மூன்று மாதங்களில் நைஜீரியாவின் இரண்டாவது பெரிய சுற்றுச் சூழல் பின்னடைவாக இந்த சம்பவம் பார்க்கப்படுகின்றது. கடந்த நவம்பரில் இதே போன்றதொரு சம்பவம் அங்கு பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தலைவர் கொல்லப்பட்டார்

## அமெரிக்கா அறிவிப்பு



(வோஷிங்டன்)

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபு இப்ராஹிம் அல்-ஹாசிமி அல்-குரேஷி கொல்லப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் அறிவித்துள்ளார்.

சிரியாவில் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக அமெரிக்க இராணுவம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் நேற்று முன்தினம் இரவு சிரியாவில் நடத்தப்பட்ட வான் தாக்குதலின்போது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபு இப்ராஹிம் அல்-ஹாசிமி அல்-குரேஷி கொல்லப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் நேற்று அதிகார பூர்வமாக அறிவித்தார்.

இது தொடர்பாக ஜோ பிடன் நேற்று அதிகாரபூர்வமாக அறிவித்தார். (நி-5)

# குளிர்கால ஒலிம்பிக் போட்டியை புறக்கணித்தது இந்தியா

(டில்லி)

சீனாவில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக் போட்டியை இந்தியா தூதரக ரீதியாக புறக்கணித்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான சீனாவின் நடவடிக்கைகளை கண்டித்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 40 நாடுகள் பங்கேற்கும் தொடக்க விழாவையும், நிறைவு விழாவையும் இந்தியா புறக்கணிக்கவுள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# உக்ரேய்ன் பதற்றங்களுக்கு மத்தியில் சீனா சென்றடைந்தார் புடின்



(கீவ்)

உக்ரேய்ன் மீதான பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், பீஜிங் குளிர்கால ஒலிம்பிக்கின் போட்டிகளின் தொடக்க நிகழ்வில் பங்கெடுப்பதற்காக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் நேற்று வெள்ளிக்கிழமை பீஜிங் சென்றடைந்தார்.

சீனா சென்றடைந்துள்ள புடின், அமெரிக்காவுடனான அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் நெருக்கமான ஒத்துழைப்பைப் பற்றி விவாதிக்க சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்குடன் ஒரு சந்திப்பை நடத்துவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

உக்ரேய்னுடனான மோதலில் மொஸ்கோவிற்கு சீன ஆதரவு அதிகரித்து வரும் நிலையில் ரஷ்ய தலைவரின் வருகை ஆயுத மோதலில் வெடிக்கும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது.

சீனாவின் மனித உரிமை மீறல்கள் மற்றும் உய்குர்கள் மற்றும் பிற முஸ்லிம் சிறுபான்மையினரை பீஜிங் நடத்தும் விதம் போன்றவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து, குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுக்கு அதிகாரிகளை அனுப்பமட்டோம் என்று அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிற நாடுகளும் முடிவெடுத்துள்ளன.

எனினும் 2022 பீஜிங் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் தனது இருப்பை உறுதிப்படுத்திய முதல் வெளிநாட்டுத் தலைவராக புடின் மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## மனவளக்கலை யோகப் பயிற்சிகள்

**யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில் அன்பர்களுக்கோர் இனிய செய்தி!**

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
பின்னருள தருமங்கள் யாவும்,
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
**என்ற பாரதி இயம்பியமைக்கு அமைய அதனிலும் மேலான**
**'உலகப்பெருநிதி அறுபத்தைந்தாம் கலையாகிய**
**"மனவளக்கலையை"**
**இந்த ஆண்டு முழுவதும் யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில்**
முதற்கட்ட 7 நாட்கள் கொண்ட உடற்பயிற்சி காயகல்பம்
அடுத்து வரும் அகத்தாய்வு 1... 2... 3... பயிற்சிகளுக்கும்
**"அன்னை பார்வதி அறக்கட்டளையை சார்ந்த அன்பர்கள் பெருமனம் கொண்டு அனுசரணை வழங்க திருவுளம் கொண்டுள்ளார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பதில் பேருவுகை கொண்டுள்ளோம்...**
எனவே பயிற்சியாளர்கள் கட்டணமேதுமின்றி பயிற்சிகளை பெற்றுக் கொள்ள முடியும்.

❖ உடல் நலத்திற்கு - எளிய முறை உடற்பயிற்சி ❖ உயிர் வளத்திற்கு - சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
❖ மன அமைதிக்கு - தியான பயிற்சிகள் ❖ அறிவு வல்லமைக்கு அகத்தாய்வு பயிற்சிகள் ❖ உறவுகள் மேம்பட - தற்சோதனைப் பயிற்சிகள்

**காலம்: 05.02.2022 சனிக்கிழமை**
**நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00**
**பயிற்சியை வழங்குபவர் : துணை பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் துணை பேராசிரியர் ந.ஜெயகிருஷ்ணா மற்றும் அருள்நிதி க.தவமணிதாசன் அருள்நிதி த.சிவகாமி அருள்நிதி க.ஜெயராணி**

வருக வருக நலம் பெருக பெறுக
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்

தொடர்புகளிற்கு : யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்
இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு,
... யாழ்ப்பாணம்.
... இல.021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309
(C-3706)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதியில் போராட மன்று தடை

# கறுப்பு கொடிகளுடன் கடலில் இறங்கி போராடிய மீனவர்கள்

(யாழ்ப்பாணம்)

**வீதியில் போராட நீதிமன்று தடை விதித்த நிலையில் பருத்தித்துறை மீனவர்கள் கறுப்புக் கொடிகளுடன் கடலில் இறங்கி தமது போராட்டத்தை வெளிப்படுத்தினர்**



இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்து பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் மீனவர்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுத்து வந்த நிலையில் அவர்களின் வீதிமறியல் போராட்டத்திற்குப் பருத்தித்துறை நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இந்நிலையில் மீனவர்கள் தமது போராட்ட வழிமுறையை மாற்றி இலங்கையின் சுதந்திர தினத்தைக் கரிநாளாகத் தெரிவித்துக் நேற்று வெள்ளிக்கிழமை கடலில் கறுப்புக் கொடிகளுடன் இறங்கி போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இதன்போது இதுவரை காலமும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் உயிரிழந்த மீனவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மீனவர்கள் மெழுகுதிரிகளை ஏந்திக் கறுப்புக் கொடிகளுடன் கடலில் இறங்கிப் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்திற்குத் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரும் தமது ஆதரவைத் தெரிவித்துக் கலந்து கொண்டனர்.(4-5-18-33-104)



## சுதந்திரதின நிகழ்வுகளை முன்னிட்டு வவு.வில் மூன்று வீதிகளுக்கு பூட்டு



(குருமன்காடு)

வவுனியா நகரசபை மைதானத்தில் இலங்கையின் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்ற நிலையில் ஏ9 வீதி உட்பட மூன்று வீதிகள் சுமார் 4 மணிநேரம் மூடப்படிருந்தன.

சுதந்திர தின நிகழ்வுகள் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர தலைமையில் இடம்பெற்றதுடன் பிரதம அதிதியாக வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் கு.திலீபன் கலந்து கொண்டார்.

நிகழ்வினையடுத்து ஏ9 வீதியின் மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து மருத்துவமனை சுற்றுவட்டம் வரையிலான பாதையும், நகரசபை வீதி, நூலக வீதி ஆகியன காலை 6.30 மணிதொடக்கம் காலை 10.30 மணிவரையிலான காலப்பகுதியில் தற்காலிகமாக மூடப்பட்டதுடன் அதி உயர் பொலிஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டது.

மேலும், சுதந்திர தின நிகழ்வுகளுக்கு செல்பவர்கள் பலத்த சோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் நிகழ்வுகளை பார்வையிட பொதுமக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. (4-5-250)

## அறுவடை செய்த நெல்லினை நாசம் செய்த யானைகள்



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இடைக்கட்டு குளத்தின் கீழ் காலபோக நெற்செய்கையினை மேற்கொண்ட விவசாயி ஒருவர் தனது நெல்லினை அறுவடை செய்து பைகளில் அடுக்கி வயலில் வைத்திருந்து விட்டு ஏற்றுவதற்காக உழவு இயந்திரத்திற்காக காத்திருந்த வேளை குறித்த பகுதிக்குள் புகுந்த காட்டு யானைகள் விவசாயினை அச்சுறுத்திவிட்டு 20 இற்கு மேற்பட்ட நெற் பைகளை நாசம் செய்துள்ளன.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றது. குறித்த விவசாயி இடைக்கட்டு குளத்தின் கீழ் இரண்டு ஏக்கர் நெற்செய்கையினை மேற்கொண்டு மிகவும் கஷ்டப்பட்டு அதிக விலைக்கு உரத்தினை வாங்கி களை நாசினியினை பயன்படுத்தி செய்கையினை மேற்கொண்ட நிலையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தற்போது நெல்லுக்கு அரசாங்கம் நல்ல விலை அறிவித்துள்ள நிலையில் காட்டு யானையினால் தான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் இதற்கான இழப்பீட்டினை அரசாங்கம் பெற்றுத்தரவேண்டும் என்றும் தெரிவித்தார்.

## வவுனியாவில் கைதி ஒருவர் விடுதலை

(குருமன்காடு)

நாட்டின் 74 ஆவது சுதந்திர தினத்தில் வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் விடுவிக்கப்பட்டார்.

74 ஆவது சுதந்திர தினத்தையடுத்து ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவின் பொது மன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் 197 சிறைக்கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

அதன்படி வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து மல்லாவி பகுதியினை சேர்ந்த 43 வயதுடைய கைதி ஒருவரே இவ்வாறு விடுவிக்கப்பட்டார். (4-5-250-299)

## அரங்க கதையாடல்

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கத்தினால் மெய்நிகர் இணையவழியில் நடத்தப்படும் வாராந்த அரங்கக் கதையாடல் 78 ஆவது நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் அரங்கச் செயற்பாட்டாளர் கலைமாமணி எஸ்.ரி.குமரன் "உயிர்ப்பு தெருவெளி ஆற்றுகையும் படைப்பாக்கமும்" என்னும் விடயப் பொருளில் கதையாடவுள்ளார்.

இந்நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி 6473348261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ள முடியும். (4-5)

## கலந்துரையாடல் பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

யா/பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு விழா தொடர்பான கலந்துரையாடல் நாளை 6 ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணங்களால் நடைபெறாது எனவும் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என பாடசாலை அதிபர் ந.பரமேஸ்வரன் அறிவித்துள்ளார். (4-5)



வடக்கு மாகாணத்தில் இடம்பெற்ற இலங்கையின் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள்.

(படங்கள் : சிவசுந்தரம், ரவிசாந், லெனாதன், ஜோசப்நயன், வசந்தரூபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரதி அனுமதிப் பத்திரம் பெற வருவோரில் 10 வீதமானவர்கள் போதைக்கு அடிமையானவர்கள்

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண

(கொழும்பு)

வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக வருவோரில் 10 சதவீதமானவர்கள் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

வாகன சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்காக வருகை தந்தோரை தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

ஒரு நாளில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 1213 பேரில் 145 பேர் போதைப் பொருளை பயன்படுத்தியிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் போதைப் பொருளைப் பயன்படுத்தி வாகனங்களைச் செலுத்தும் நபர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என சிரேஷ்ட பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித்ரோஹண தெரிவித்தார். (நி-5)



# தொலைபேசி உரையாடல்களை பதிவு செய்யக் கூடாது

## இராணுவத்தினருக்கு புதிய கட்டுப்பாடு

(கொழும்பு)

இராணுவத்தினர் அலைபேசி மற்றும் ஸ்மார்ட் பேசிகள் பயன்படுத்தும் போது சில புதிய கட்டுப்பாடுகளை இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இராணுவப்படையினரின் அலைபேசிகள் மற்றும் ஸ்மார்ட் பேசிகளில் உரையாடல்களை பதிவு செய்யும் வசதி காணப்படுகிறது. எனினும் தொலைபேசி உரையாடல்களை பதிவு செய்யக்கூடாது என இராணுவத் தலைமையகம் உத்தரவிட்டுள்ளது.

உரையாடல்களை பதிவு செய்வதனால் இராணுவ இரகசியங்கள் வெளியே கசியும் என்ற காரணத்தினால் இவ்வாறான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தொலைபேசி உரையாடல்கள் பதிவு செய்யப்படுவது தேசியப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி-5)

# இலங்கை கோரிக்கை விடுத்தால் பேச்சுவார்த்தைக்குத் தயார்

## சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

இலங்கை கோரிக்கை விடுத்தால் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான பிரதானி இதனைத் தெரிவித்துள்ளாரென வெளிநாட்டு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் நிபுணத்துவ ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வதற்கான கோரிக்கை எழுத்து மூலம் விடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ முன்னதாக தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ஒரு லட்சம் மெற்றிக் தொன் சோளம் இறக்குமதி செய்ய அனுமதி

(கொழும்பு)

கால்நடை தீவன உற்பத்திக்காக சுமார் ஒரு இலட்சம் மெற்றிக்தொன் சோளம் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் தெரிவித்தார்.


இதற்கமைய, சோள இறக்குமதியின் மூலம் முட்டை மற்றும் கோழி இறைச்சியின் விலை குறையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## பகை, பிணி போக்கும் கருட பஞ்சமி



கத்ரு, குதிரையின் வெண் நிறத்தை கறுப்பு நிறமாக மாற்ற, தன் மகனாகிய கார்க்கோடகன் என்ற கருநிற பாம்பை குதிரையின் வாலில் சுற்றிக் கொள்ளுமாறு பணித்தாள். அதன்படியே கார்கோடகன் செய்ய, பாம்பு சுற்றிய வால் கறுப்பு என்று காட்டி வினதையை அடிமை கொண்டாள்.

வினதை அடிமையானதால் அவளது மகன்கள் அருணனும், கருடனும் அடிமையாயினர். தாயின் அடிமையை நீக்க எண்ணினார் கருடன்.

தேவலோகத்தில் உள்ள அமிர்தத்தை கொண்டு வந்தால், உங்களுக்கு விடுதலை கிடைக்கும் என்றாள் கத்ரு.

கருடனும், சரி என்று கூறி விரைவாக தேவலோகத்தை அடைந்தார். அவரை தேவேந்திரனும், தேவர்களும் வஜ்ராயுதம் மற்றும் பல்வேறு ஆயுதங்களால் தடுத்தனர்.

இந்திரனுடைய வஜ்ராயுதத்துக்கு மரியாதை அளிக்க விரும்பிய கருடன், தன் சிறகுகளில் ஒன்றை அதற்கு அர்ப்பணம் செய்தார்.

இதைப்பார்த்து இந்திரன் மகிழ்ச்சி அடைந்தான். இந்திரனிடம் கருடன் என் தாயாரின் அடிமைத்தனத்தை போக்கவே அமிர்தம் கொண்டு போக வந்தேன். நான் இதைக் கொண்டு போய் கத்ருவிடம் கொடுத்த பிறகு நீங்கள் மறுபடியும் இதை இங்கு கொண்டு வந்து விடலாம் என்று கூறினார். அதற்கு இந்திரனும் அனுமதி அளித்தான்.

கருடன் அமிர்தம் இருக்கும் இடம் சென்று அதை எடுத்துக்கொண்டு போய் கத்ருவிடம் கொடுத்தான். அவளும் வினதையை அடிமைத் தளையில் இருந்து விடுவித்தாள். கருடன் வேதமே வடிவமானவர்.

இராமாயணத்தில் இந்திரஜித் எய்த நாக பாசத்தால் இராமரும் இலட்சுமணரும் திகைத்து நிற்கையில், கருடனின் காற்றுப்பட்டு ராமலட்சுமணர்களை கட்டியிருந்த நாகஸ்திரம் விலகியது. சூரியனின் ரத சாரதியான அருணன் கருடனின் சகோதரன் ஆவார்.

### கருட மந்திரம்

ஒருவர் தொடர்ந்து ஆறு மாதம் கருட மந்திரத்தை உச்சரித்து வந்தால், அவரது பார்வைக்கு தன் சக்தியின் ஒரு துளியை கருடன் தருகிறார் என்பது ஐதிகம் ஆகும். அந்த கருட மந்திரம் இது தான்...

ஓம் தத்புருஷாய வித்மஹே
ஸுவர்ண பக்ஷாய தீமஹி
தன்னோ கருட ப்ரசோதயாத்.

(தொடரும்)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 330 | 450 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 600 | 450 | 500 |
| தக்காளி | 170 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 50 |
| கோவா | 200 | 230 | 250 |
| கரட் | 440 | 450 | 500 |
| பூசணி | 160 | 130 | 200 |
| புடோல் | 250 | 200 | 200 |
| வாழைக்காய் | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 150-180 | 200 |
| பாகற்காய் | 300 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 180 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 500 | 450 | 400 |
| லீக்ஸ் | 220 | 230 | 300 |
| பீற்றூட் | 350 | 280 | 400 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 1400 |
| போஞ்சி | 250 | 260 | 300 |
| கத்தரிதம்புள்ள | 350 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 70 | 80 | 80 |
| தேசிக்காய் | 140 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50-90 | 70-90 |
| இராசவள்ளி | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 180 | 200 | 300 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 110 | 80 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதத்தை வென்றது போல் சவால்களையும் வெல்ல உறுதிபூண வேண்டும்

## சுதந்திர தின உரையில் ஜனாதிபதி



(கொழும்பு)

தற்போதைய நெருக்கடியை சமாளிக்க நாட்டின் சகலரும் தியாகங்களைச் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய சுதந்திர தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளி யிட்ட அவர், 'நாட்டில் மத. ஊடக சுதந்திரம் இருக்கின்றது. கருத்துத் சுதந்திரம் இருக்கின்றது. பொறுப்புகளை நிறைவேற்றாமல் எவரும் உரிமைகளை பற்றி பேசக்கூடாது.

அரசியல், பொருளாதா ரம் நாட்டில் பலமாக இருக்க வேண்டும். நாட்டின் தலை வர் பல பிரச்சினைகளை தினசரி எதிர்நோக்க வேண் டியுள்ளது. ஒரு இலக்கை நோக்கி செயற்படுவது இலக்கல்ல.

சிலசமயம் உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் எம க்கு எதிராக செயற்படுகி ன்றன. மக்கள் இவற்றை புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் நாட்டின் சவால்களை எதிர் கொள்ள நான் தயாராக இருக்கிறேன். சிறந்த நிலைப்பாடுகளால் நாம் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

புதிய உலகத்துடன் நாம் போட்டியிட வேண்டுமானால் நாம் நம் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். கடினமான காலம் என்றென்றும் நீடிக்காது. கடினமான காலங்களை எதிர்கொள்ள வலிமையானவர்கள் தேவை.

அதனால் மற்றவர்களை மனதளவில் புண்படுத்தும் யாரும் சமுதாயத்திற்கு எந்த உதவியும் செய்வ தில்லை. நாம் சந்திக்கும் பிரச்சினைகள் நீண்ட கால பிரச்சினைகள் அல்ல.

பயங்கரவாதத்தை தோற்கடிக்க முடியாதென கூறப்பட்டது. ஆனால் நாங் கள் வென்றோம். நாங்கள் எமது சவால்களை வெல்ல திடசங்கற்பம் பூண வேண் டும். அர்ப்பணிப்பு, தியாகங்களை செய்யவேண்டும். நாட்டை பாதுகாக்கும் தலைவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளை மக்கள் நிராகரிக்க வேண்டும்.

எந்தவொரு காரணத் திற்காகவும் அடிப்படை வாதம் மீண்டும் தலை தூக்க அனுமதிக்கப்பட மாட்டாது. கடந்த காலங்க ளில் சவால்கள் சமாளிக்க ப்பட்டது போன்று அடுத்த வருடங்களிலும் நாம் சவால்களை வெல்வோம்" என அவர் தெரிவித்தார். (நி-5)

# பூஸ்டர் தடுப்பூசியை பெற்றவர்கள் எவரும் இதுவரை உயிரிழக்கவில்லை

## மருத்துவ அதிகாரி ருவான் விஜேயமுனி

(கொழும்பு)

**ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இதுவரையில் கொழும்பு மாநகரத்திற்குள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களில் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்கள் எவரும் உயிரிழக்கவில்லை என்று கொழும்பு மாநகரசபை தெரிவித்துள்ளது.**


மாநகர சபையின் பிரதம மருத்துவ அதிகாரி ருவான் விஜேயமுனி இது குறித்து நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இதுவரையில் தடுப்பூசி மருந்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் விரைவாக அதனை பெற்றுக்கொள்ளுமாறு இதன் போது தெரிவித்தார். ( நி-5)

# இலங்கையின் சுதந்திர தினத்தை முன்னிட்டு வாழ்த்துக்களை பகிர்ந்துள்ளது கூகுள்

(கொழும்பு)

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கூகுள் நிறுவனம் இலங்கையின் தேசிய கொடியினை தனது அட்டைப் படத்தில் வெளியிட்டு தமது வாழ்த்துக்களைப் பகிர்ந்துள்ளது.




இதேவேளை, இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 8514 இராணுவ வீரர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்கியுள்ளார்.

ஜெனரல் சவேந்திர சில்வா 2019 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 18 ஆம் திகதி இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் குறுகிய காலத்திற்குள் பெருமளவிலான அதிகாரிகள் மற்றும் ஏனைய இராணுவ வீரர்களுக்கு பதவி உயர்வை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

## செய்யாத தவறுக்குத் தண்டனையா?

எந்தத் தவறையும் செய்திராத நிலையில் தண்டனை மட்டும் அனுபவிப்பது என்பது கொடுமையான ஒன்றுதான்.

இத்தகையவர்கள் தங்கள் மனத்தை எப்படிச் சமாதானம் செய்து கொள்வது?

தினமும், ஒரு மனிதன் இருபது வகையான சட்ட மீறல்களையோ, சமுதாயத்தினால் தவறு என்று எண்ணப்படுகிற செயல்களையோ செய்கிறான் என்று மனவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் எப்போதாவது ஒரு முறைதான் அவன் சிக்குகிறான்; தண்டனை பெறுகிறான். இன்று நீங்கள் செய்யாத ஒரு தவறுக்காகத் தண்டனையை அனுபவிக்கிறீர்கள் என்றால் ஏற்கனவே உலகின் கண்களுக்கு மிளகாய்ப் பொடி தூவி விட்டுச் செய்த பல தவறுகளின் விளைவுகள் இன்று ஒன்றுசேர்ந்துவிட்டன என்று எண்ணிச் சமாதானம் அடைவதைத் தவிர வேறு வழியில்லை.

கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் தங்கள் மனத்தைச் சமாதானம் செய்து கொள்வது என்பது இன்னும் எளிது. நான் செய்த தவறுகளையெல்லாம் பொறுத்துக்கொள்ள முடியாத இறைவன், இன்று என்னைத் தண்டித்து விட்டான் என்று இவர்கள் மனப்பூர்வமாக நம்பலாம்.

சிலர் திறமையின்மை காரணமாகவும் செய்யாத தவறுகளுக்குத் தண்டனை அனுபவிப்பது உண்டு.

அதாவது, தான் ஒரு குற்றவாளி அல்ல என்பதை உணர்சியூர்வமாக – மற்றவர்களுக்குச் சிறிதும் ஐயம் ஏற்படாதபடி மறுக்க இவர்களுக்குத் தெரியாது.

மேலும் தான் குற்றவாளி அல்ல என்பதை நிரூபிக்கத் தக்க சாட்சியங்களையோ காரணங்களையோ இவர்கள் கூற மாட்டார்கள். காரணம் இவர்களுடைய தப்பிக்கும் உணர்வும் சுயசிந்தனையும் இல்லாததுதான். அல்லது இருந்தும் அவற்றின் அவசியத்தை உணர்ந்திருக்க மாட்டார்கள்.

பின்னர் ஏகமாக வருந்துவார்கள். இத்தகையவர்கள், நம்மிடமுள்ள இத்தகைய குறைபாட்டின் காரணமாகவே தண்டனையை அனுபவிக்கிறோம் என்று எண்ணிச் சமாதானம் அடைய வேண்டும்.

சிலர் சூழ்நிலை காரணமாகத் தண்டிக்கப்படுகிறார்கள். இவர்கள் சூழ்நிலைக் கைதிகள், இவர்கள் நாம் இயற்கையின் சூழலுக்கு ஆளாகி விட்டோமே என்று எண்ணி வருந்திச் சமாதானம் அடைவதைத் தவிர வேறு வழியில்லை.

மாறாக, நான் இத்தகைய சூழ்நிலைக்கு ஆளாகக் காரணமாயிருந்தவர்கள் யார் என்று ஆராய்ந்து, அவர்களைப் பழிவாங்குவேன் என்று எண்ணுபவன், ஊர் உலகின் கண்களுக்கு மட்டுமின்றித் தன் நெஞ்சுக்கே குற்றவாளியாகிறான். சிக்கலின் மேல் சிக்கல்!

ஊரெல்லாம் பாராட்ட மனசாட்சி மட்டும், நீ ஒரு குற்றவாளி அல்ல என உள் மனம் கூறும் வார்த்தைகளைப் பெரும் துணையாகக் கொள்வதே மிகப்பெரும் நிம்மதி என்று எண்ணிச் சமாதானம் அடையுங்கள்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ஆமையும் நத்தையும்

ஒரு நாள் இஜபா என்ற ஆமைக்கு உலகிலேயே தான் தான் அறிவாளியாக இருக்க வேண்டும் என்று ஆசை வந்து விட்டது. தனக்கு மேல் யாரும் அறிவாளியாக இருக்கவே கூடாது என்றும் விரும்பியது.

எனவே இந்த உலகத்தில் உள்ள அறிவுகளை எல்லாம் திரட்டி வைத்துக் கொள்ள முடிவு செய்தது.


பூமியின் மூலை முடுக்கெல்லாம் போய் எல்லாவிதமான அறிவுகளையும் பெற்றுக் கொண்டது.

அவை அனைத்தையும் ஒரு குடுவையில் போட்டு கழுத்தில் மாலை போல மாட்டிக் கொண்டு விட்டது.

“அப்பாடா ... நான் தான் இப்போது உலகத்தில் எல்லோரையும் விட அறிவாளி” என்று நினைத்துக் கொண்டது ஆமை.

ஆனால் அதற்கு இன்னொரு அச்சம் இருந்தது. தன்னிடமிருக்கும் அறிவை யாரும் திருடி விடுவார்களோ என்று சந்தேகப்பட்டது.

யாருக்கும் எட்டாத இடத்தில் தான் சேமித்த அறிவை ஒளித்து வைக்க என்ன செய்யலாம் என்று யோசித்தது?



மிகவும் உயரமாக இருக்கும் பனை மரத்தின் உச்சியில் தன் அறிவுக் குடுவையை வைத்து விட்டால் யாருக்கும் எட்டாது என்று திட்டம் போட்டது.

கழுத்தில் குடுவையை மாலை போல மாட்டிக் கொண்டு, கயிறு கட்டி மரத்தில் ஏறலாம் என்று நினைத்தது.

கயிற்றில் ஒரு முனையை தன் கழுத்திலும் மற்றொரு முனையை மரத்திலும் கட்டி விட்டு மரத்தில் ஏற முயன்றது.

ஆனால், கழுத்தில் அணிந்திருந்த குடுவை மரத்திற்கும் அதன் மார்புக்கும் இடையே தொங்கிக் கொண்டிருந்ததால் மரத்தில் ஏறுவதற்குத் திண்டாடியது.

இதனால் கீழே இறங்கிவிட்டு மீண்டும் ஏற முயன்றது. மீண்டும் அதே போல ஏற முடியவில்லை.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## பால காண்டம்

**05**

(தொடர்ச்சி)

மாபெரும் மன்னர், தம் வெற்றிச் சிறப்பை திக்கு எட்டும் அறியச் செய்ய விரும்பினார். அடக்க முடியாத குதிரை ஒன்றினை முன் அனுப்பி அதனை மடக்குபவரை எதிர்க்கப் படைகள் பின் தொடர்ந்தன.

அதனைக் கட்டி வைப்பவர் மாவீரன் என்ற புகழ் பெறுவார்; அவர்களை எதிர்த்து வெற்றி பெற்றுத் திறை பெற்றுத் தம் இறையிடம் சேர்த்தனர். சிற்றரசர்கள் அடி பணிந்து பேரரசனின் ஆணையை ஏற்றனர்.



அரசன் மாமன்னன் என்று புகழப்பட்டான். தசரதனும் இப்பரி வேள்வியைச் செய்து முடித்துவிட்டுப் பின் இம்மகவு நல்கும் நல் வேள்வி நடத்தினான்.

தெய்வங்கள் புகழ்ச்சிக்கும் வழிபாட்டுக்கும் மகிழ்ந்து கேட்ட வரங்களைக் கொடுத்து வந்தன. தவம் செய்வோர்க்கு ஆற்றலையும் ஆயுளையும் தந்தன. அசுரர்களும் அமரர்களும் மாறிமாறித் தவங்கள் செய்து சிவனிடமும் பிரமனிடமும் வேண்டிய வரங்களைப் பெற்றனர்.

வரங்களைப் பெற்றதும் தம் தரங்களை மறந்து, உரம் கொண்டு முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் இடையூறு விளைவித்தனர்.

அரக்கர்களை எதிர்க்கும் ஆற்றல் இல்லாத தேவர்களும் மாமுனிவர்களும் தெய்வங்களை அடைந்து தம்மைக் காக்கும்படி வேண்டினர்.

வரம் கொடுத்த தெய்வங்களே வழி தெரியாமல் திகைத்தன. பிரமனும் சிவனும் பாற்கடலில் பள்ளி கொண்டிருந்த பரமனிடம் சென்று முறையிட்டனர்; அவர்களோடு இந்திரனும் சென்றான்.

திருவுறை மார்பன் ஆகிய திருமால் அருள் செய்ய வந்து, அவர்களுக்கு ஆறுதல் உரை கூறினார். தெய்வங்கள் தந்த வரத்தை மானுடனே மாற்ற முடியும் என்று கருதித் தான் மானுட வடிவம் எடுத்துத் தசரதன் மகனாய்ப் பிறந்து அந்தக் கொடியவரை வேர் அறுப்பதாய் வாக்களித்தார். அங்கு முறையிட வந்த வானவர்கள் தாமும் மண்ணில் வானரராகப் பிறந்து உதவுவதாய் உறுதி அளித்தனர்.

அவனுக்கு “வண்ணப் படுக்கையாய் இருந்த ஆதிசேடன், இலக்குவனாகப் பிறக்க” என்று ஆணையிடப்பட்டது; “தம் கைகளில் தங்கி இருந்த சங்கு சக்கரங்கள் பரத சத்தருக்கனர்களாகப் பிறக்க” என்று ஆணை பிறப்பிக்கப் பட்டது.

தெய்வங்கள் நேரிடையாகக் களத்தில் இறங்கத் தயங்கினர். அவர்கள் குரங்குகளுக்குத் தலைமை தாங்கினர். இந்திரனின் கூறு, வாலியாகவும் அங்கதனாகவும் செயற்பட்டது; காற்றின் மைந்தனாக ஆற்றல் மிக்க அனுமன் பிறந்தான். பிரமனின் கூறாகச் சாம்பவான் ஏற்கனவே பிறந்திருந்தான் என்பது அறிவிக்கப்பட்டது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உரையாடல் என்பது ஒருவரையொருவர் புரிந்து கொள்ள உதவும். ஆனால் தனிமை என்பதே மேதைகளின் பள்ளிக்கூடமாக இருக்கிறது.
– கிப்பன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழக முதலமைச்சருடன் தொலைபேசியில் கதைத்தால் என்ன?

தமிழக மீனவர்கள் கடல் எல்லைதாண்டு வதன் காரணமாக ஏற்பட்டுள்ள பதற்றம் இன்னமும் தணிந்தபாடில்லை.

தமிழக மீனவர்கள் கடல் எல்லைதாண்டி வருவதைத் தடுக்கக்கோரி எங்கள் மீனவர்கள் நடத்துகின்ற போராட்டம் தொடர்ந்த வண்ணமுள்ளது.

கடற்றொழில் அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது விடயத்தில் தலையிட்டாலும் அது நிலைமையைச் சுமுகமாக்கவில்லை.

இதற்கு மேலாக, மீனவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் வகையில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மறியல் போராட்டம் நடைபெறும் இடங்களுக்குச் சென்று வருகின்றனர்.

ஆக, தங்களின் வாழ்வாதாரத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்துக் குறித்து எங்கள் மீனவர்கள் போராட்டம் நடத்த, அதனைத் தமக்கு அரசியல் இலாபமாக்க தமிழ் அரசியல்வாதிகள் சிலர் முற்பட்டிருப்பதைக் காணும்போதும் மனம் கசுகசுகிறது.

உண்மையில், தமிழக மீனவர்கள் கடல் எல்லைதாண்டி வருவதால், எமது மீனவர்கள் தமக்கான கடல்வளத்தை இழந்து போகின்றனர்.

இதற்கு மேலாக, அவர்களின் மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்படுவதுடன் சில சந்தர்ப்பங்களில் மீனவர்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டு விடுகிறது.

எனவே மீனவர்கள் நடத்துகின்ற போராட்டத்துக்குரிய நடவடிக்கை; தமிழக மீனவர்கள் கடல் எல்லைதாண்டுவதை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதாகும்.

அதைச் செய்வதாக இருந்தால் இந்திய மத்திய அரசுடன், தமிழக முதலமைச்சருடன் கலந்துரையாடி நிலைமையைச் சுமுகமாக்க வேண்டும்.

ஆனால் அந்த விடயம் இதுவரை நடந்தாகவில்லை.

உண்மையில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுடன் தொடர்பு கொண்டு எமது மீனவர்களின் நிலைமையை எடுத்துரைப்பதற்கு நம்பிப் ஆன அரசியல் தலைவர்கள் இல்லை என்பதை உணரமுடிகிறது.

ஆம், எமது மீனவர்கள் போராட்டம் நடத்தும்போது, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அல்லது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அல்லது தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அல்லது தமிழ் அரசியல் தலைவர்களில் யாரேனும் ஒருவர், தமிழக கடற்றொழில் அமைச்சர் அல்லது தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அல்லது மத்திய வெளியுறவு அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கையை வலியுறுத்துவதும் அதுபற்றி எங்கள் மீனவர்களுக்குத் தெரியப்படுத்துவதுமே இன்றைய தேவையாக இருக்கும்.

ஆனால் தமிழக முதலமைச்சருடன் அல்லது இந்திய வெளியுறவு அமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கதைக்கின்ற ஆளுமையும் தகைமையும் இல்லாதவர்களாக எங்கள் அரசியல் தலைவர்கள் இருக்கின்றனர் எனும்போது, யார்தான் என்ன செய்ய முடியும்.

# தொற்றாளர்களின் எண்ணிக்கை 30 வீதத்தால் அதிகரிப்பு

### விசேட வைத்திய நிபுணர் அன்வர் ஹம்தானி

(கொழும்பு)

நாட்டில் கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 30 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக கோவிட்–19 கட்டுப்படுத்தல் தொடர்பான இராஜாங்க அமைச்சின் இணைப்பாளர் விசேட வைத்திய நிபுணர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் நாளாந்தம் ஆயிரத்திற்கும் அதிக தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். இதுவரை பதிவான மரணங்களின் எண்ணிக்கையிலும், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கடந்த வாரத்துடன் ஒப்பிடும்போது தொற்றாளர் எண்ணிக்கை 30 சதவீதத்தினாலும், மரணங்களின் எண்ணிக்கை 8 – 10 சதவீதத்தினாலும், ஒட்சிசன் தேவையுடைய தொற்றாளர் எண்ணிக்கை 4 சதவீதத்தினாலும் மற்றும் அதிதீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்படுவோர் எண்ணிக்கை 4 – 5 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது என்றார். (ம)

## கீரிமலையில் சாராயத்துடன் ஒருவர் பொலிஸாரால் கைது

(அராலி)

கீரிமலை பகுதியில் 54 கால் போத்தல்கள் சாராயத்துடன் 44 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தின் பிரதி பொலிஸ் பொறுப்பதிகாரி உதயானந்தன் தலைமையின் கீழ் சென்ற பொலிஸார் குழாமின் விசேட சுற்றிவளைப்பின்போது பதுங்கு குழியில் இருந்து இந்த சாராயப் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட சாராயப் போத்தல்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான செயற்பாடுகளை காங்கேசன்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-104)

## வரணியில் விபத்து; பெண் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணி – எருவன் பகுதியில் பருத்தித்துறை வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

வீதியைக் கடக்க முற்பட்ட 71 வயதான பெண்ணை வீதியால் பயணித்த மோட்டார் சைக்கிள் மோதியதில் பெண்ணின் கை மற்றும் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதில் வரணி – குடமியன் பகுதியைச் சேர்ந்த 71 வயதான வயோதிப மாது இவ்வாறு விபத்தில் சிக்கி படுகாயமடைந்துள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-30)

## கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள "யாவர்க்கும் நலம்" எனும் zoom மூலமான நிகழ்ச்சித் தொடரானது பிரதி சனிக்கிழமை தோறும் மாலை 7.00 மணி – 9.00 வரை இடம்பெறுகின்றது.

அந்த வகையில்இன்று சனிக்கிழமை "சருமம் மற்றும் கேசப் பராமரிப்பு" எனும் தலைப்பில் கருத்தமர்வு இடம்பெறும் எனவடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கலந்து கொள்வதற்கான Meeting ID : 899 8528 2023, Pass code : 354485 ஆகும். (4-5)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கீரிமலை திருவருள்மிகு ஸ்ரீ மகா முத்து மாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 12 நாட்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணி யளவில் தேர்த்திருவிழாவும் மறுநாள் 17 ஆம் திகதி வியாழக்கிழமை மாசிமகத் தீர்த்த திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (4-6)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### இறைவன் என்னும் காந்தக்கல்

❖ ஓர் அழகிய முகத்தைக் கண்டு ஒருவன் அதன் பின் ஓடுகிறான் என்றால் ஒழுங்காக அமைந்த பிடியளவு பரமாணுக்களா அவனைக் கவர்ந்தன? இல்லவே இல்லை. அந்த ஜடப் பரமாணுக்களுக்குப் பின்னால் இருந்து கொண்டு ஒரு தெய்வீக கவர்ச்சி, ஒரு பேரன்பு விளையாடுகிறது. மூட மனிதனால் இதை அறிய முடிவதில்லை. இருந்தாலும் அந்தக் கவர்ச்சியினால் தான் அவனும் அறிந்தோ, அறியாமலோ ஈர்க்கப்படுகிறான். அதனால் சிற்றின்பக் கவர்ச்சிகளில் கூட தங்கள் கவரும் ஆற்றலை அப்பரமனிடம் இருந்தே பெறுகின்றன.

❖ என் அன்புக்கு உகந்தவளே! எந்த ஒரு கணவனும் அவன் கணவன் என்பதற்காக விரும்பப்படுவதில்லை. ஆன்மாவிற்காகவே, அவனுள் சுடர் விடும் இறைவனுக்காகவே காதலிக்கப்படுகிறான். இதைக் காதல் மனைவியர் அறிந்திருக்கலாம். அல்லது அறியாமல் போகலாம். ஆனால் உண்மை என்னவோ இதுதான்.

❖ அதேபோல் என் அன்புக்குரியவளே! யாரும் மனைவிக்காக மனைவியை விரும்புவதில்லை. அவளிடம் குடிகொண்டிருக்கும் ஆன்ம பிரகாசத்திற்காக நேசிக்கப்படுகிறாள். அதுபோலவே குழந்தையிடம் ஆசை காட்டுவதும் இவ்வுலகில் வேறு எந்தப் பொருளையும் விரும்புவதும் அவற்றுக்காக அல்ல. அவற்றுள்ளே வீற்றிருக்கும் இறைவனுக்காகவே.

❖ இறைவன் ஒரு பெரிய காந்தக்கல். நாமெல்லாம் இரும்புத் துகள்கள். அவன் எப்போதும் நம்மைக் கவர்ந்தபடி இருக்கிறான். நாமும் அவனை அடைய பாடுபட்டு வருகிறோம். நமது இந்தப் பாடுகளெல்லாம் உண்மையில் சுயநலத்திற்காக அல்ல.

❖ முட்டாள்களுக்குத் தாங்கள் என்ன செய்கிறோம் என்பது தெரிவதில்லை. தம் வாழ்நாளில் அவர்கள் செய்ய வேண்டிய வேலை அப்பெரிய காந்தக் கல்லை அணுகுவது தான்.

❖ வாழ்க்கையின் அத்தனை போராட்டங்கள், கொந்தளிப்புகள் அனைத்தும் முடிவில் இறைவனை அடைந்து அவனுடன் ஒன்றாவதற்கே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

70

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



சிறிய பொருட்களை இவ்வாறு அளந்தவர்கள் பெரிய பொருட்களையும் நுண்ணிய பொருட்களையும் அளத்தலுக்குப் பிற கருவிகளைக் கண்டுபிடித்தனர். இந்நிலையில் நூல், கயிறு, தோல், சங்கிலி, நெல், எள்ளு போன்ற பிற அளவுக் கருவிகள் தோற்றம் பெற்றன.

(குறிப்பு- ஓரிகே அக்காலத்தில் வழங்கிய ஓர் அளவையாகும். ஓரிகே என்பது (origuioe) இருகை (Two hands) என்பதன் திரிபாக இருக்கலாம். இருகைகள் என்பது 4 முழங்கள் கொண்ட ஓர் அளவு அல்லவா? அக்காலத்தில் ஓர் ஓரிகேயின் தோராய அளவு 4 முழங்கள் என்று எடுத்துக் கொண் டது இருகை (Two hands) என் பதே ஓரிகே ஆக மருவியிருக்க வேண்டும் என்று தெரிய வருகிறது.)

தமிழர் வாழ்வியலில் முதன் முதலாகத் தெரிய வரும் அளவையாக அமைவது "அடி, இன்று ஒரு அடி என்பதனை "12 இஞ்ச்" என்ற ஆங்கில அளவில் குறிப்பிடும் பழக்கம் காணப்படுகிறது. அடி என்பதனை "Foot" என்ற சொல்லால் குறிப்பிடும் வழக்கினை நாம் காண்கிறோம்.

நாம் அன்று காலடி கொண்டு கணக்கிட்டதும் இடைக் காலத்தில் பல அடி, சாண்களைக் கொண்ட கோல்கள்ளப் பயன்படுத்தியதும் இன்று அடி என்று அளத்தலுடன் மாறுபாடுயுடையன. அதாவது இன்று வழக்கத்தில் இருக்கும் அடி அல்ல அன்று வழக்கத்தில் இருந்த அடி. இவை இரண்டும் வெவ்வேறானவை. எனினும் பெயர்ப் பொருத்தம் உலகம் முழுமையும் முதலில் காலடியைக் கொண்டே நீளத்தை மாந்தர் கணக்கிட்டனர் என்பதனையுணர இடம் தருகிறது.

எனவே இன்று காலின் அடிக்கும் ஒரு அடிகோலுக்கும் இருக்கும் மாறுபாடு அடியில் உள்ள வளர்ச்சி நிலையாகக் கருதத்தக்கது. மாந்தரின் காலடிகள் அனைத்தும் ஒன்றானவையல்ல; வேறுவேறுபட்ட அளவுடையன. இந்நிலையில் துல்லியத் தன்மையும், திடத்தன்மையும் கருதி ஒரு அடி என்பது 12 இஞ்ச் என்றும், மூன்று அடி கொண்டது ஒரு யார் (கஜம்) என்றும் அவர்கள் உருவாக்கிக் கொண்டு இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

சாண் என்ற அளவினைச் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். சாண் என்ற அளவு ஒன்பது அங்குலம் என்பது தமிழ் லெக்ஸிகனில் கூறப்பட்டுள்ளது. சாகணேசன் தனது நூலில் 12 விரல்-1 சாண் என்கிறார். எட்டு அங்குலம் 1 சாண் என்பாரும் உண்டு. விரல் பற்றிய எண்ணங்களை இடைக் காலத்தில் காண்கிறோம். இசைக் கருவிகளின் விளக்கத்தில் விரல் அளவு பற்றி வருகிறது. சிற்பம் பற்றிய அளவை முறைகளில் விரல், தோரை அளவுகளைக் கல்வெட்டுகள் இயம்புகின்றன. 8 தோரை-1 விரல் என்றும், 12 விரல்-1 சாண் என்றும், 2 சாண்-1 முழம் என்றும் அறியப்பட்டது.

நூல், கயிறு ஆகியவை பயன்பட்ட முறையில் எந்த அளவினைக் கொண்டவையாக இருந்தன. நாம் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை என்றாலும் ஏதோ அவரவர்களுக்குத் தேவையான அளவுள்ள நூலையோ, கயிற்றையோ பயன்படுத்தியிருந்திருக்க வேண்டும் என்பதனை உணர முடிகிறது.

அடி, சாண், விரல் இவற்றின் திடம், துல்லியம் கருதிய நிலையில் இவற்றை அடிப்படையாகக் கொண்டு நிலையான அளவைகள் கண்டுபிடிப்பின் நோக்கமே கோல்களின் தோற்றம் எனலாம். பன்னீரடிக் கோல், பதினெண் அடிக்கோல் என்ற பல அளவுகள், அடி கொண்டு அளந்த நிலையில் ஏற்பட்ட வளர்ச்சியாகும்.

16 சாண் கோல், 19 சாண் கோல் என்பனவற்றில் சாண் அளவு வளர்ச்சியையும் கோலளவு இருபத்து நால் விரலாக என்று சிலம்பு காட்டும் போது விரல் அளவுகளின் வளர்ச்சியையும் காண்கிறோம். அதிக நீளத்தைக் கைகளால் சாண் சாணாக அளத்தல் கடினம் எனக் கருதி, பல அடிகளை, சாண்களை அல்லது விரல்களைக் கொண்ட கோல்களை உருவாக்கி அளவு கருவியை எளிமைப்படுத்தும் நிலை என இதனைக் கருதலாம்.

பெரும்பாலும் மரத்தினால் செய்யப்பட்டன இக்கோல்கள் என்பது சிலம்பு தொட்டு இன்று வரை காணத்தக்க ஒன்று. இன்று இரும்பு போன்ற பிற உலோகங்களினாலும் பிளாஸ்டிக்கினாலும் செய்யப்படுவதையும் காண்கிறோம்.

இக்கோல்களின் அளவு வேறுபாடு காரணமாக வேறு பெயர்கள் சூட்டப் பெற்றிருந்த நிலையைக் காணலாம். 25 விரல் நீளமுடையது பிரஜாபத்யம்; 26 விரல் நீளமுடையது வில்முட்டி: 27விரல் நீளமுடையது வில்பிடி. இக் கோல்கள் அளக்கப்பட்ட பொருட்களுக்கு ஏற்பவும் மாறுபட்டு இருந்தன.

கோல்கள் போன்று கயிறு, நூல் கொண்டு அளத்தலும் இன்றுவரை தொடர்ந்து வரும் ஒரு மரபாகும். இத்தகைய முறையில் விரல், சாண், அடி, நூல், கயிறு, கோல் என்ற வளர்ச்சியில், பிற நுண்மை அளவுகளும் உருவாகத் தொடங்கின.

அவை 8 அணு = 1 தேர்த்துகள்; 8 தேர்த்துகள் = 1 இம்மி; 8 இம்மி = 1 எள்ளு; 8 எள்ளு = 1 நெல்லு; 8 நெல்லு = 1 பெருவிரல் எனப்பட்டது. இதனையும் சில நுண்பகுதிகளாகப் பிரித்து நோக்குகிறது பின்னர் வந்த கணக்கதிகாரம் என்ற நூல் (கி. பி. 15 ஆம் நூற்றாண்டு). அதில் அணுவு எட்டுக்கொண்டது - 1 கதிர் எழுதுகள்; 8 கதிர் எழுதுகள் - 1 பஞ்சிற்றுகள்; 8 பஞ்சிற்றுகள்- 1 மயிர் முனை; 8 மயிர் முனை- 1 நுண் மணல்; 8 துண் மணல்- 1 சிறுகடுகு; 8 சிறுகடுகு- 1 எள்ளு; 8 எள்ளு-1 நெல்லு; 8 நெல்லு-1 விரல்; 12 விரல்- 1 சாண் என வரையறுக்கப்பட்டிருந்தது.

இந் நெல் அளவிலும் நுணுகிய பார்வை அமைந்தது என்பதனை 8 நெல்- 1 உத்தமமானப் பெருவிரல் என்றும்; 7 நெல் - 1 மத்திமமானப் பெருவிரல் என்றும்; 6 நெல்-1 அதிதமானப் பெருவிரல் என்றும் குறிப்படப்பட்டது.

சிற்பங்களுக்கு என்று கல்வெட்டுகள் கூறும், விரல் தோரை போன்ற அளவுகளுடன் மேற்கண்ட துண்ணிய அளவுகளையும் நோக்க, இவை நுண்மையான அளவினை அதாவது ஓவியம், சிற்பம், சித்திரம் போன்றவற்றை அளக்கப் பயன்படுத்தப்பட்டவைகளாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. இத்தகைய பல்வகைப்பட்ட நீட்டல் அளவை கருவிகளைக் கொண்டு தமிழர் நீட்டல் அளவையை அமைத்துக் கொண்டனர்.

அனுமான அளவுகளாகவும் பலவற்றைத் தமிழர் கட்டினர். அனுமானப் பிரமாணம், கூப்பிடுதூரம், ஆள் மட்டம், தொலை தூரம், ஜதிகப் பிரமாணம் போன்ற அனுமான அளவைகளைத் தமிழ் லெக்ஸிகன் சுட்டுகின்றது. இத்தகைய பலதரப்பட்ட தமிழர் நீட்டல் அளவை வரலாற்றைச் சில பகுதிகளாகப் பிரித்து நோக்கலாம். அவை 1. நிலமும் அளவையும் 2, கலையும் அளவையும் 3. ஆடையும் அளவையும் ஆகும்.

## நிலமும் அளவையும்

பண்டைத் தமிழரின் நில அளவை பற்றிய சில எண்ணங்களே தெரிய வருகின்றன. இடைக் காலத்துத் தமிழர் வரலாற்றில் இதனைப் பற்றிய பல எண்ணங்கள் தெளிவுறுகின்றன. நிலங்கள் அளந்து பயன்படுத்தலுக்குரிய தேவை என்ன என்று முதலில் நோக்கலாம். முதலில் மக்கள் தொகைப் பெருக்க மின்மை காரணமாக நிலங்கள் அளத்தல் தேவையாகக் கருதப்படவில்லை, வாணிப நிலையிலும் விற்க, வாங்க, பிற்காலம் போன்ற நெருக்கடி நிலை அன்றில்லை. பின்னர், பல சமுதாய சூழல்கள் நிலம் அளத்தலுக்குரிய தேவையை உருவாக்குகின்றன. அறிவு வளர்ச்சி காரணமாக நிலங்களை அளந்து, திட்டமிட்டுப் பயிர் செய்யத் தொடங்குகின்றனர்.

விளை நிலங்களின் குறிப்பிட்ட அளவுக்கு ஏற்ற விதைப்பாடு எனக் கணக்கிடும் போது, அங்கு அளவு தேவைப்படுகிறது. பயிரின் வளர்ச்சிக்கும் சிறந்த பலனுக்கும் பயிர்களை விதைக்கும் முறைக்கும் அளவு தேவைப்படுகிறது.

உரமிடும் நிலையிலும் இவ்வளவு நிலத்துக்கு இவ்வளவு என்ற நிலையில் அளவு தேவைப்படுகிறது. மேலும் மக்கட் பெருக்கம், விற்றல், வாங்குதல் என்ற நிலையிலும் குடும்ப உறவுகள், பங்கிட்டுக் கொடுக்கும் நிலை போன்ற தேவைகளிலும் அளவு முக்கியமாகிறது. இக்காரணங்களைப் பிற்காலத்தில் நிலங்களை அளந்து கணக்கிட்ட வளர்ச்சி நிலைகளுக்குரிய காரணங்களாகச் சுட்டலாம்.

பண்டைத் தமிழர் வாழ்வியல் கூறுகளில் சில, நிலம் அளந்து அதற்குக் குறிப்பிட்ட பெயரிட்டு வழங்கிய நிலையைச் சுட்டுகிறது. மா, செறு என்ற இரண்டு வித நில அளவுகள் பற்றி காணக் கூடியதாக உள்ளது. "மா" வினை விடச் செறு, பெரியதொரு நிலத்தைக் குறிக்க வந்த சொல் என்பது வெளிப்படையான பொருள்.

இன்று மா என்ற அளவினை வேலியில் 20 இல் 1 பங்கு எனவும், 100 குழி நிலம் எனவும், 1/4 காணி நிலம் எனவும் கட்டுகின்றனர். பல கல்வெட்டுகளில் "மா" என்ற அளவு பற்றி காணக் கூடியதாக உள்ளது.

இந்நிலை, தமிழகம் முழுவதும் இவ்வளவை இருந்திருக்கிறது என்பதை உணரச் செய்கிறது. இன்று பொதுவாக தமிழகம் முழுவதிலும் இவ்வளவை இல்லை எனினும், தஞ்சாவூரில் இந்நில அளவை இருக்கிறது என அறியக் கூடியதாகவுள்ளது.

அன்று முதல் இன்று வரை தஞ்சையின் வளம், நெல் வயல்கள் மேம்பட்ட நிலை, அது தொடர்பான அளவைகளிலும் ஏதும் மாற்றமின்றி நடை முறையில் உள்ளது. செறு என்ற அளவை இன்று காணப்படவில்லை, எனினும் "செறு" என்பது இன்று பொதுவாக "நிலம்" என்பதைக் குறிக்கிறது. அன்று எவ்வளவு அளவுள்ள நிலத்தைக் குறிப்பிட்டது என்பது தெளிவுறவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 29 மரணம்...

டில் பதிவான மொத்த கோவிட் - 19 மரணங்களின் எண்ணிக்கை 15,544 ஆக உயர் வடைந்துள்ளது.

மேலும் கொரோனாத் தொற்று உறுதியான 1,243 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 15 ஆயிரத்து 902 ஆக அதிகரித்துள்ளது.(ம)

## மீனவர்கள்...

டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - வடமராட்சி மீனவர்கள் தொடர்ந்து ஐந்தாவது நாளாக நேற்றும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மீனவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நேற்று போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மீனவர்களிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அத்துமீறி நுழையும் மீனவர்களை கைது செய்வதற்கு கடற்படையினருக்கு உத்தரவிடக் கோரியும், 2017ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க இழுவைமடி தடை சட்டம் மற்றும் வெளிநாட்டு படகுகளுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு மீன்பிடி வள்ளங்களை ஒழுங்குபடுத்தும் 2018ஆம் ஆண்டின் முதலாம் இலக்க சட்டம் ஆகியவற்றை நடை முறைப்படுத்தக் கோரியும் உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்யவுள்ளேன். அதற்கு வடக்கு மீனவ சங்கங்களின் ஆதரவு வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (ம-18,33)

## மாணவர்கள் உட்...

கொண்டாட்டம் நகர சபை மைதானத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது அணிவகுப்பில் ஈடுபட்ட பாடசாலை மாணவர்கள், சிவில் பாதுகாப்பு படை வீரர்கள், பொலிஸார், இராணுவத்தினர் ஆகியோர் பிரதான நிகழ்வு கொட்டகைக்கு முன்னால் மைதானத்தில் அணிவகுப்பு மரியாதை முடிந்த பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக குறித்த மாணவர்கள், இராணுவத்தினர், பொலிஸார், சிவில் பாதுகாப்பு தரப்பினர் மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டமையால் வெயில் தாக்கம் காரணமாக 13 மாணவர்களும் 5 சிவில் பாதுகாப்பு படை வீரர்களுமாக 18 பேர் மயங்கமடைந்திருந்தனர்.

அவர்களை உடனடியாக செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் அழைத்து சென்று நோயாளர் காவு வண்டியில் வைத்து முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்டிருந்தது.

பல மாணவர்கள் மயங்கி விழுவதை அவதானித்த நிகழ்வின் அதிதியாக கலந்துகொண்ட மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் வெயிலில் நின்ற மாணவர்களுடன் உரையாடிவிட்டு உடனடியாக அம் மாணவர்கள் அங்கிருந்து சென்றபின் ஏனைய நிகழ்வுகளை நடத்துமாறு அரச அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இதன்பின் மாணவர்கள், சிவில் பாதுகாப்புப் படையினர், பொலிஸார், இராணுவத்தினர் மைதானத்தில் இருந்து கலைந்து செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-250,299)

## குற்றத்தடுப்பு...

பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவில் (சி.சி.ஐ.டி) ஒருவர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

அந்த தேவாலயத்தில் இருந்த சங் கிறிஸ்டியன் முனீந்திரன் என்பவர் தடுப்புக்காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரை, கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, நேற்று சென்று பார்வையிட்டார். (ம)

## நாட்டில் எல்லோ...

ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற 74ஆவது சுதந்திர தின நிகழ்வில் ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொறுப்புகளை மறந்து உரிமைகளை பற்றி மாத்திரம் பேசுவது பொருத்தமானதல்ல. ஒரு நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வதில் நாட்டிலுள்ள அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்க முடியாது.

எதிர்கால சுபீட்சத்திற்காக திட்டமிட்டதை விட்டுக்கொடுக்க தயாரில்லை. நாட்டிற்கு சரியானதைச் செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும். அனைவரையும் மகிழ்விப்பது அல்ல.

அவநம்பிக்கையாளர்களால் உலகை மாற்ற முடியாது. பிரச்சினைக்கு தீர்வு காணாமல் விமர்சித்து பழகியவர்களுக்கு எதிர்காலம் குறித்த தொலைநோக்கு பார்வை இல்லை.

கடினமான காலங்கள் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இதுபோன்ற நேரங்களை எதிர்கொள்ள வலிமையானவர்கள் தேவை. மற்றவர்களை மனரீதியாக வீழ்ச்சியடைய செய்யும் நபர்கள் சமூகத்திற்கு உதவ மாட்டார்கள் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (ம)

(மேலும் ஒரு செய்தி உள்ளே)

## சுதந்திர தின...

மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி புறக்கணித்துள்ளது.

இதேவேளை, தேசிய சுதந்திர தின கொண்டாட்டத்தை பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையும் புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## யாழ்.பல்கலை...

வர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

நேற்று முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற சிவில் சமூகங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திர தினத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து, போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் முகமாக, பல்கலைக் கழக மாணவர்கள் முள்ளிவாய்க்காலுக்கு செல்வதற்காக, தமது வாகனங்களை பல்கலைக் கழகத்தில் தரித்துவிட்டு செல்ல முற்பட்ட நிலையில், பல்கலைக் கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மாணவர்கள் உள்நுழைய அனுமதி மறுக்கப்பட்டதோடு, பரமேஸ்வரா ஆலயத்திற்கு செல்பவர்களிற்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் சுதந்திர தினம் என கொடியேற்றுகிறீர்கள். ஆனால் பல்கலைக்கழகத்திற்குள் மாணவர்கள், ஆலய வழிபாட்டை மேற்கொள்பவர்கள் செல்ல முடியாதா? என மாணவர்களால் கேள்வி எழுப்பப்பட்ட நிலையில், பல்கலைக்கழகத்தில் கடமையாற்றுபவர்களையே நாங்கள் அனுமதிக்கவில்லை என பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் மாணவர்களால் சுதந்திர தினம் கரி நாள் என தெரிவித்து கறுப்புதுணிபிரதான வாயிலில் கட்டப்பட்டது.(ம-18,33,104)

## உயிரோடு...

விடுத்து மீனவர்களின் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

வடமராட்சி சுப்பர்மடம் பகுதியில் ஐந்தாவது நாளாக நேற்றைய தினமும் மீனவர்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்தில் கறுப்பு உடை தரித்து போராட்டத்தில் கலந்துகொண்ட ஒருவரே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் கடலில் உயிரிழந்த மீனவர்களின் ஆத்மாவாக, இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கட்டுப்படுத்துமாறு கோருகிறேன். அதேவேளை இந்திய மீனவர்களிடமும், எமது கடல்வளங்களை, எமது சக மீனவர்களின் வாழ்வாதாரத்தை, உயிரை அழிக்காதீர்கள் எனக் கோருகிறேன்.

உயிர் வாழும் மனிதர்களாக பல தடவைகள் பலரிடம் கோரிக்கை விடுத்தும் எதுவும் நடக்கவில்லை. ஐந்து நாட்களாக தொழிலுக்கு செல்லாமல் தொடர் போராட்டத்தினை முன்னெடுத்து வருகிறோம். எமக்கான தீர்வினை தருவதற்கு எவரும் தயாராக இல்லை.

உயிரிழந்த மீனவர்களின் ஆத்மாவிற்கு மதிப்பளித்தாவது, நடவடிக்கைகளை எடுங்கள். அந்த மீனவர்களின் ஆத்மா சாந்தியடையும் எனத் தெரிவித்தார். (ம-18,33,60)




































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Win Repair

- உங்கள் குளிர்சாதனப் பெட்டி பழுதடைந்து விட்டதா? உடனே எம்மை அழையுங்கள். உடன் வந்து திருத்தித் தருகின்றோம்.
- உங்கள் வீடுகளை அழகுபடுத்த கேற், கிறில் வகைகளை குறைந்த விலையில் நேர்த்தியாக செய்து தருகின்றோம்.

(10053)

- 077 964 8942

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி றோட் புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து புத்தூர் செல்லும் பிரதான வீதியில் இரண்டாவது காணி 2 பரப்பாகவும் 1 1/2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம்
நல்ல சூழல், 1 பரப்பின் விலை
பத்து இலட்சம், ஒன்பது இலட்சம், எட்டு இலட்சம்

(10050)

☎- 077 623 4204

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்.**

பிளாஸ்டிக் பொருட்கள், சில்வர் வகைகள், பாட்டா வகைகள், தையல் உபகரணங்கள், நவீன வட்டின்கள், பொம்மை வகைகள், மாஸ்க் வகைகள், சனிரேசர் வகைகள், விளையாட்டுப் பொருட்கள், கவரிங் நகைகள், அன்பளிப்புப் பொருட்கள் இவை அனைத்தும் கொழும்பு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(10022)

26/1, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம். 077 468 3354

தே. கலைத்தாசன் (கரன்) உரிமையாளர், சரவணபவன் பான்சி ஹவுஸ்

## பிரத்தியேக வகுப்பு

**G.C.E (A/L) -2022 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்க வணிகக்கல்வி**

துரித மீட்டல் மற்றும் Pass Paper Classes
ஆரம்பம் - 2022.02.20
நேரம் - பி.ப 3.30 மணி

தரம் - 9, 10, 11 மாணவர்களுக்க
**வரலாறு, வணிகக்கல்வி, கணிதம்**
(பலவீனம் மற்றும் (O/L) பரீட்சையில் சித்தி அடையா மாணவர்களுக்கும் அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.)
ஆரம்பம் - 2022.02.12
நேரம் - பி.ப 4.00 மணி

Pass Paper classes மற்றும் Model Paper Classes
தரம் - 6,7,8 மாணவர்களுக்க
**விஞ்ஞானம், தமிழ் வகுப்பு**
ஆரம்பம் - 2022.02.16
நேரம் - பி.ப.3.30 மணி

(10027)

கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
077 527 6626
076 645 9287


## தேசிய கொடி நடுவீதியில் எரிப்பு



(லண்டன்)

பிரித்தானியாவில் உள்ள இலங்கை தூதுவராலயத்தின் முன் நடைபெற்ற கரி நாள் போராட்டத்தின்போது இலங்கையின் தேசிய கொடி வீதியில் வைத்து எரிக்கப்பட்டது.

அத்தோடு, தூதரகத்தின் மாடியில் தமிழர் தாயகத்தின் தேசியக் கொடி பறக்க விடப்பட்டிருந்தது.

பிரித்தானியாவின் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டவர்கள், இலங்கையின் சுதந்திர நாளுக்கெதிரான பதாதைகளை தாங்கியபடி கண்டனக் கோசங்களையும் எழுப்பியிருந்தனர். (ம)


## தீபம் கல்வி நிலையம்

(இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்)

**கல்வியாண்டு - 2022**

தரம் 6 முதல் O/L மற்றும் A/L வரை
தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புகள்
தரம் 6 ஆரம்பம்:-05.02.2022 (சனி மாலை 4 மணி)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு - 077 224 7781
'தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சிமிகு எதிர்காலம்'

(10011)

## காணி விற்பனைக்கு

கோப்பாய் ஸ்ரீ சர்வானந்தா பாடசாலைக்கு அருகில் 8 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
பிரித்தும் வழங்கப்படும்.
(கோப்பாய் பிரதான வீதியில் இருந்து 200M தூரத்தில்)

(10024)

077 082 1010, 077 441 0919

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனியில் 30 பரப்புக் காணி பத்து பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
1 பரப்பின் விலை 320,000/=
15 அடி பாதையுடன் அச்சுவேலியிலிருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கம்பனிக்கு முன் வீதி
(அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 km தூரம்)

(10022)

076 890 9259, 077 015 0353

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நுணாவில் வைரவர் கோயில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பிரதான வீதி முகப்புடன் 16 பரப்புக் காணி (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
(A9 வீதியிலிருந்து 150m தூரத்தில்)

(10022)

077 288 0152/077 911 6983
076 658 3621

## 3D-Modeling & Rafting

Personal & Group Classes
Link:0775116320-0718617972
Auto CAD Software



Location:Jaffna-Kilinochchi-Vavuniya

(C-3708)

## Spoken English Personal Classes

3 மாதத்தில் ஆங்கிலம் சரளமாகப் பேசக் கற்பிக்கப்படும்.

(9988)

T.P - 077 948 5703

## கணிதம்

இம்முறை O/L எழுதும் மாணவர்களுக்கான கணித பாட மீட்டல் வகுப்பு Zoom மூலமாக நடைபெறுகிறது.
ஆசிரியர் : P.சசீகரன்

(10044)

- 076 646 3860

## விற்பனைக்கு

பாவித்த ஓடுகள், அலுமினியம் பிறீங், தொட்டில், மர அலுமாரி என்பன விற்பனைக்கு உண்டு.

(10038)

077 029 9953
070 640 1733

## ENGLISH ஆங்கிலம்

பிரத்தியேக வகுப்புகள் அனுபவமிக்க ஆசிரியரினால் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

(10032)

077 658 9443 யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் நெடுங்குளம் வீதியில் (A9 வீதியிலிருந்து 500m) சிறிய வீட்டுடன் 1 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை.)

077 444 9119

## மணமகள் தேவை

1977, இந்து கௌரவ குடும்பம். திருவோண நட்சத்திரம், 56 ½ கிரக பாவம் உடைய அரச உத்தியோக மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (10026)

077 728 6050

# றோயல் அக்கடமி
# ROYAL ACADEMY

நாவலர் றோட், நல்லூர். அரசடி றோட், யாழ்ப்பாணம்.

## தரம் 6 முதல் O/L வரை

**கல்வியாண்டு - 2022**

தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள்

(9969)

**ஆரம்பம் - 05.02.2022, சனிக்கிழமை**

☞ புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றது.

## வரலாறு, கணிதம் தரம் 09 - A/L

மாணவர்களின் விருப்பத்துக்கேற்ப தனி, குழுவாக வீடுகளுக்கு வந்து அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும். தேசிய, மாவட்ட சிறந்த பெறுபேற்றுக்காக வழிகாட்டும் உங்கள் ஆசான். கல்வி நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம். (9904)

தொ.இல. 077 482 5438

## கனடாவில் வேலைவாய்ப்பு WORK PERMITS

தகுதிகள்:- A/L PASS/ DIPLOMA/DEGREE ஆங்கில அறிவு (C-3684)



அனைத்து துறைகளிலும் அனுபவம் அறிவு, ஆங்கிலப்புலமை உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சூப்பர் லேன், யாழ்ப்பாணம்.

0777-068-777

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வசாவிளான் கிழக்குப் பகுதியில் கார்பெட் வீதி அருகில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு (9991)

076 449 4166
074 141 9820

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • பருத்தித்துறை • கிளிநொச்சி • சாவகச்சேரி • வல்வெட்டித்துறை • சுன்னாகம் • புங்குடுதீவு

(C-3679)

0768226240 DHL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.